குங்குமச்

# சிமிழ்

15-4-2013
ரூ 4.00



## ஒருமுறைதான் வரும்...

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்

# ஒருமுறை தான் வருமà¯...

"சம்பந்தி என்னை நீங்க மன்னிக்கணும்... இப்படியெல்லாம் ஆகும்னு நான் சத்தியமா நினைக்கவே இல்ல. அநியாயமா உங்க மக நிர்மலாவோட வாழ்க்கையை என் மகன் சேகர் கெடுத்திட்டானேன்னு நான் ரொம்ப வேதனைப்படறேன்..."

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே சம்பந்தி. தப்பு மாப்பிள்ளை மேல மட்டுமில்ல, என் மக மேலயும் இருக்கு. ஆயிரம்தான் அந்தஸ்து, படிப்பு, தொழில் எல்லாத்திலேயும் சமம்ன்னாலும் பெண்ணுன்னா ஆணுக்குக் கொஞ்சம் அடங்கித்தான் போகணும். அனுசரிச்சுப் போறதுதான் வாழ்க்கை. அடாவடி பண்ணினா இப்படித்தான். அவுங்க ரெண்டு பேரும் கொழுத்துப் போய் இப்படியொரு முடிவை எடுத்தாங்கன்னா அதுக்கு நாம என்ன பண்ண முடியும்...?"



"கடவுள் புண்ணியத்திலே ஒரு நல்ல சம்பந்தத்தை நாம ஏற்படுத்திக்கிட்டோம். உங்களை மாதிரி ஒரு அற்புதமான மனிதரைப் பார்க்க முடியாது.

## ஏர்வாடி.எஸ்.இராதாகிருஷ்ணன்



பிள்ளைகளுடைய இந்த முடிவால நம்ம உறவிலே கூட ஒரு முறிவு வந்திடுமோன்னு பயமா இருக்கு."

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது! இவுங்க எப்படி வேணும்னாலும் போகட்டும். நீங்க எனக்கு எப்பவும் சம்பந்திதான். நாம நம்ம வீடுகள்ல சந்திக்க முடியாமல் போனாலும் வெளியே எங்கேயாவது அடிக்கடி சந்திக்கலாம். அதுக்குக் கூட அவசியமில்ல. இது நம் குடும்பங்கள் முதலீடு பண்ணி நடத்தற ஒரு மல்டி ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல். சேகரும் நிர்மலாவும் டைவர்ஸ் வாங்கிக்கிட்டாகூட இந்த நிறுவனம் தொடர்ந்து நடக்கப் போகுது. நாம எல்லாரும் டைரக்டர்ஸ்ங்கிற முறையிலே சந்திக்காமலா இருக்கப் போறோம்!"

"இதுகூட இல்லாமல் போனா நம்ம உறவுகள் சுத்தமா அறுந்து போயிருக்கும். இப்பக்கூட ஒண்ணும் கெட்டுப் போகல. குடும்பக் கோர்ட் மூலமா இவுங்களுக்கு டைவர்ஸ் வர்ற வரை இவுங்க ரெண்டு பேரும் கணவன் மனைவிதான். நாமும் சம்பந்திகள்தான். அப்புறம்தான் டைரக்டர்ஸ்."

சம்பந்திகள் சபாநாயகமும் ராமலிங்கமும் பேசிக் கொண்டிருக்கும் போது மருத்துவ மனையின் ஜெனரல் மேனேஜர் முரளி வருகிறார்.

"எக்ஸ்யூஸ்மி அய்யா... கான்சர் யூனிட்டுக்கான எல்லா சிவில் ஒர்க்கும், இன்டீரியரும் முடிஞ்சிருக்கு. இனிமே எக்யூப்மெண்ட்ஸ் இன்ஸ்டால் பண்ணனும். அதிர்ஷ்டவசமா வர்ற பதினெட்டாம் தேதி தொடங்கி வைக்கிறதுக்கு ஹெல்த் மினிஸ்டர் ஒத்துக்கிட்டார். இன்விடேஷன்ஸ், பப்ளிசிட்டின்னு நிறைய வேலை இருக்கு. எல்லாத்துக்குமா பேங்கிலேர்ந்து ரெண்டு லட்சம் பணம் எடுத்து வச்சிக்கிட்டா நல்லது."

"மாப்பிள்ளைகிட்டே பேசறேன். செக் வாங்கிக்கங்க..." என்று சொல்லவும் டாக்டர் சேகர் உள்ளே நுழையவும் சரியாக இருக்கிறது.

"மாப்பிள்ளை, உங்களுக்கு ஆயுசு நூறு..." என்று குழைந்தார் சபாநாயகம்.

"தாங்க்ஸ் மாமா... முரளி எல்லா விவரமும் சொல்லியிருப்பார்ன்னு நினைக்கிறேன். விழாவை அமர்க்களமா நடத்திடலாம். "முரளியின்

பக்கம் திரும்பி..” கீழே அக்கவுண்ட்ஸ்ல போய் செக் எழுதி வாங்கிட்டு வாங்க. கையெழுத்து போட்டுத்தர்றேன்” என்று அவரை அனுப்பிவிட்டு தன் தந்தையின் பக்கம் திரும்புகிறாள்.

“அப்பா...! ஊர்லேருந்து அத்தையையும் கதிரேசன் மாமாவையும் ஒரு வாரத்துக்கு முன்னாடியே வரச்சொல்லிடுங்க. அவர்தான் கட்சிக்காரர். இவுங்களை வரவேற்க சரியா இருக்கும்.”

“எல்லாம் சரிதாம்ப்பா. எல்லாரும் வந்திடுவாங்க. ஆனா நீயும் நிர்மலாவும் எப்படிப்பா எல்லாரையும் ரிசீவ் பண்ணப் போறீங்க. ஒருத்தரோட ஒருத்தர் முகம் கொடுத்துப் பேச மாட்டேங்கிறீங்க. மினிஸ்டரையும் வரப்போற பெரிய மனுஷங்களையும் எப்படி வரவேற்கப் போறீங்க? அவுங்கள்லாம் வரும்போது நீங்க ரெண்டு பேரும் முகத்தைத் திருப்பிக்கிட்டு நின்னிங்கன்னா எப்படி?”

“அப்பா நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க. எல்லாம் நல்லபடி நடக்கும். நாங்க ஒண்ணும் எலிமென்ட்ரி ஸ்கூல் பிள்ளைகள் கிடையாது. கா வுட்டுட்டுப் பேசாம இருக்கிறதுக்கு. எங்களுக்கும் நாகரிகம் தெரியும். யாரையும் விட்டுக் கொடுக்காம நடந்துக்குவோம். அப்பா... எனக்கு அவசரமா ஒரு சர்ஜரி அட்டென்ட் பண்ண வேண்டியிருக்கு. அப்புறம் பார்க்கிறேன். மாமா.. வர்றேன்” என்று அவசரமாகப் புறப்பட்டுவிட்டான். அவனோடு வந்த டாக்டர் கிரிஜாவும் பின்தொடர்ந்தாள்.

“பாருங்க சம்பந்தி... இப்படிப் பரபரப்பா ஓடிட்டிருக்கான். நிர்மலாவும் நர்ஸிங் ஹோம், காலேஜ், வீடு, சோஷியல் சர்வீஸ்னு பறந்திட்டிருக்கா. இத்தனை நெருக்கடிகளுக்கிடையே ரெண்டு பேருக்கும் சண்டை போட்டுக்க எங்கே நேரம் கிடைச்சுதுன்னு தெரியலே...

சண்டை போடறதுக்கு நேரம் தேவையில்ல. ஒருத்தரையொருத்தர் புரிஞ்சிக்கத்தான் நேரம் வேணும். சண்டை போடலாம் தப்பில்லே. ஆனா சமாதானமாகிடணும். கீரியும் பாம்புமா அடிச்சிக்கிற கிராமத்து ஜனங்ககூட ராத்திரியானா கூடிக்கிறாங்க. அந்த பண்பு இங்கே படிச்சவங்ககிட்டே கிடையாது. இதெல்லாம் எங்கே போய் முடியப் போகுதோ!” என்று பேசிக்கொண்டே ஆடிட்டோரியத்துக்கு நடந்து சென்றனர். விழாவுக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக.

## 2

சேகருடைய அறைக்கு நிர்மலா வந்திருக்கிறாள் அழைப்பிதழ்களுக்கான கவர்கள் முதலில் அச்சாகி வந்தன. முகவரிகள் எழுதும் பணி கீழே அலுவலகத்தில் நடந்து கொண்டிருக்க அழைப்பிதழுக்கான டிசைனை கம்ப்யூட்டரில் இருவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

“எனக்கு இதிலே எதுவும் பிடிக்கலே. அரசியல் கூட்டங்களுக்கு அடிக்கிற அழைப்பிதழ் மாதிரி இருக்கு. அழைப்பிதழ்ல யாருடைய படமும் வேண்டாம். நம்ம ஹாஸ்பிட்டலோட கட்டட முகப்பு முதல் பக்கத்திலே இருக்கணும். இரண்டாவது பக்கம் அழைப்பிதழ். மூணாவது பக்கம் நிகழ்ச்சி நிரல். நாலாவது பக்கம் நம்மகிட்டே இருக்கற பல டிபார்மென்ஸ்ஸோட படங்கள் அல்லது பிளாங்க். கலர் மைல்டா இருந்தா போதும்.”

“சரி.. அப்புறம் பேக் டிராப்... இதோ இந்த டிசைனாவது நல்லா இருக்கான்னு சொல்லு நிர்மலா...”

என்று கம்ப்யூட்டரில் காட்டுகிறான் சேகர்.. நிர்மலாவின் முகத்தில் அதிருப்தியின் சாயல்... மெலிதாக எரிச்சலை வெளிப்படுத்தியவாறு...

“என்ன டேஸ்ட் இது. இப்படியா அடிக்கிற மாதிரி கலர் செலக்ட் பண்ணுவீங்க. மந்திரியும் அவரோட வர்ற மத்த வி.ஐ.பிகளும் வெள்ளையும், சொள்ளையுமா வருவாங்க. நம்ம ஹெல்த் செக்ரட்ரிகூட ஒயிட் அன்ட் ஒயிட்தான். ஸ்டேஜிலே காண்ட்ராஸ்ட் அதிகமா இருக்கும். மைல்ட் ப்ளூ அல்லது பிங்க் பேக்கிரவுண்ட் போதும். உங்க படத்தையும் என் படத்தையும் இதிலே யார் கேட்டது? ஹாஸ்பிடல் பில்டிங் மட்டும் போதும். நிர்மலா நர்சிங் ஹோம்னு சிகப்பு கலர்லேயும், கேன்சர் யூனிட்ங்கிறதை டார்க் ப்ளூ கலர்லேயும் இருந்தா நல்லா இருக்கும்.”

“சரி உன் இஷ்டம். அப்புறம் ஒரு விஷயம்... இந்த டேஸ்ட் அது இதுன்னு கமெண்ட் அடிக்கக்கூடாது. என்னோட டேஸ்ட். என்னோட செலக்ஷன் எல்லாம் எப்பவும் சரியா இருக்கிறதில்லை.... உன்னை செலக்ட் பண்ணினே அதையும் சேர்த்து...”



**கே**லபெகோஸ் தீவுகள் பசிபிக் பெருங்கடலின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தீவுத்தொகுதி ஆகும். இது ஈகுவடாரின் மாகாணமாக உள்ளது. ஸ்பானிஷ் மொழியில் கேலபெகோ என்றால் ராட்சத ஆமை என்று பொருள். இங்கு அதிகபட்சம் 350 கிலோ எடையுள்ள ஆமைகள் வசிக்கின்றன.

- க. ரவீந்திரன்

"அந்த விஷயத்தில் நான்தான் பெரிய தப்பு பண்ணியிருக்கேன். அதையெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். இப்போதைக்கு நமக்கு இந்த ஃபங்ஷன்தான் முக்கியம். அடுத்து... தொடக்க விழா முடிந்ததும் மொட்டை மாடியிலே விருந்து. பஃபே. உங்களுக்கு சிரமம் வைக்காம நானே ஏற்பாடு பண்ணிட்டேன்."

"என்னென்ன ஐட்டம்ஸ்ன்னு தெரிஞ்சிக்கலாமா?"

"அவசியமில்லே... அப்பாவே... அதாவது உங்கப்பாவே பிரமாதம்ன்னுட்டார்..."

"அதென்ன எங்கப்பா உங்கப்பான்னு பிரிச்சிப் பேசறே...?"

நான் வித்தியாசப்படுத்தல. உங்கப்பாகூட எனக்கு எங்கப்பா மாதிரி தான். அதான் 'அப்பா'ன்னு மொத்தமா சொன்னேன். உங்களுக்கு ரொம்ப காம்ளெக்ஸ். தப்பு தப்பா அர்த்தப்படுத்திக்கிட்டு தர்க்கம் பண்றீங்களே! நீங்க மாறவே மாட்டீங்களா?"

"நீ மட்டும் ரொம்ப மாறிட்டியாக்கும். அதே ஆணவம். தான் நினைச்சுது தான் நடக்கணுங்கிற திமிர்..."

"சேகர்... திஸ் இஸ் டூ மச். நீங்க மாறவே இல்ல. மாறவும் மாட்டீங்க. நாம சந்திக்கிற, பேசற சந்தர்ப்பங்கள் வரவே கூடாதுன்னு நான் நினைக்கிறதும் ஆசைப்படறதும் நடக்கமாட்டேங்கிறது. அடிக்கடி இப்படி மாட்டிக்கிறேன்."

"நான் மட்டுமென்ன... உன்னை சந்திக்கணும், கொஞ்சனும்னா நினைச்சிட்டிருக்கேன். உன்னைத் தலை முழுகத்தானே காத்திட்டிருக்கேன்."

"எனக்குக் கூடத்தான் உங்களைப் பார்க்கவே பிடிக்கலே... பேசப் பிடிக்கலே... ஆனா ஏன் உங்ககிட்டே வந்தேன். நம்ம நர்சிங் ஹோமிலே ஒரு நல்ல காரியம் நடக்கப் போகுது., நம்ம சண்டை சச்சரவுகள் அதைக் கெடுத்திடக்கூடாது. எல்லாம் நல்லபடி நடக்கணும்னு தான் என்னைக் கட்டுப்படுத்திக்கிட்டு உங்ககிட்டே பேசவர்றேன். ஆனா நீங்க உங்க குணத்தைக் காட்டறீங்க..."

சீசென் யீட்ஸா பண்டைய காலத்தைச் சேர்ந்த அழிந்துபோன மாயன் நகரம். மெக்ஸிகோ நாட்டில் யூகடான் மாநிலத்தில் உள்ளது.

கி.பி 6ஆம் நூற்றாண்டில் மாயர் இனத்தவரால் நிர்மாணிக்கப்பட்டது. இங்கு ஒரு நாளுக்கு ஒன்று வீதம் 365 படிகள் உள்ளன. இந்த வளாகத்தில் குக்குல்கான் என்ற கோயிலும் உள்ளது.

- க. ரவீந்திரன்



"என்ன பெரிய குணத்தைக் கண்டுட்டே.... நீதான் உன் குணத்தைக் காட்டற.."

"ப்ளீஸ். உங்களை கையெடுத்து கும்பிடுறேன். ஒரு வாரம் ஜஸ்ட் செவன் டேய்ஸ். கொஞ்சம் பொறுத்துக்கங்க. நான் ஏதாவது தப்பா பேசியிருந்தா சாரி... ஆகவேண்டியதைப் பேசுவோம். நோ பர்சனல் எக்ஸ்சேஞ்சஸ். இப்ப நீங்களும் நானும் இந்த நர்சிங் ஹோம டைரக்டர்ஸ். அந்த நிலையில் அந்த அளவிலே பேசுவோம். இதிலே ஒரு செக்லிஸ்ட் இருக்கு. இதை நாம ஃபாலோ பண்ணணும். உளர்லேர்ந்து

நம்ம உறவுகள் எல்லாரையும் கூப்பிடுவோம். ஃபங்ஷனை பிரமாதமா நடத்துவோம். நம்மோட வேறுபாடுகள் எதையும் வெளிக்காட்டிக்க வேண்டாம். ஓ.கே...”

என்று பொரிந்து தள்ளிவிட்டு வெளியேறினாள் நிர்மலா. இக்காட்சியை அந்த கண்ணாடி அறைக்கு வெளியே ஊஞ்சலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த சபாநாயகமும் ராமலிங்கமும் தங்களின் பிள்ளைகள் பேசிக்கொண்டது கேட்கவில்லை என்றாலும் முகபாவங்களையும் உடல் மொழியையும் பார்த்து இருவரும் திட்டிக் கொள்கிறார்கள் என்பதை மட்டும் புரிந்து கொண்டார்கள்.

“இந்த ரெண்டு பேரும் சரிப்பட்டு வரமாட்டாங்க போல இருக்கே சம்பந்தி” சபாநாயகம் சலித்துக் கொண்டார்.

“அப்படியெல்லாம் பயப்படாதீங்க. எல்லாம் நல்லபடி நடக்கும். நான் நம்ப சங்கர சாஸ்திரிகிட்டே ரெண்டு பேரோட ஜாதகங்களையும் கொடுத்துக் கேட்டேன். இதெல்லாம் முட்டிக்கற ஜாதகம் தானே தவிர வெட்டிக்கற ஜாதகமில்லேன்னு சொல்லியிருக்கார். அடிச்சிப்பாங்க அவ்வளவுதான்.”

## 3

பெரிய பெரிய குலைகள் தாங்கிய வாழைமரத் தோரணங்கள், வண்ணக் காகிதப் பூக்களின் அலங்காரம், சிகப்புக் கம்பளம், இனிய மெலிதான நாதஸ்வர இசை. நிர்மலாவே தேர்ந்து ரசித்து ஏற்பாடு செய்த ஒவ்வொன்றுமே சிறப்பாக அமைந்ததில் எல்லோருக்கும் மகிழ்ச்சி. சேகருக்கும் உள்ளூர மகிழ்ச்சி மட்டுமல்ல, கூடுதலாகப் பெருமையாகவும் இருந்தது.

எதிர்பார்த்தவாறே வெவ்வேறு ஊர்களிலிருந்து உறவினர்களும், நண்பர்களுமாய் சென்னைக்கு வந்து குவிந்து விட்டனர். சென்னை தங்கசாலை சந்திப்பிலிருந்து தண்டையார்பேட்டை நிர்மலா நர்சிங் ஹோம் வரை டிஜிட்டல் பேனர்களும், ஆங்காங்கே வளைவுகளும் தோரணங்களுமாய் வடசென்னைக்கு வருகிற எல்லோரையும் வரவேற்பது போல அமைந்திருந்தது.

நிர்மலா நர்சிங்ஹோம் வடசென்னையில் வளர்ந்து வரும் மிகப்பெரிய

பல்நோக்கு மருத்துவமனை. உடலின் எந்த நோய்க்கும் சிகிச்சையென்று நகரத்தின் புகழ் வாய்ந்த மிகப்பெரிய மருத்துவர்கள் வந்து போகும் ராசியான இடம். செலவும் அத்துணை அதிகமில்லை. அவசியமில்லாத பரிசோதனைகள், அறுவை சிகிச்சைகள் என்று மறைமுகமான கொள்ளைகள் இல்லாத அனுபவசாலி மருத்துவர்கள், ஆத்மார்த்தமாய் ஈடுபாடு காட்டும் நியாயமான மருத்துவமனையாய் நிமிர்ந்து நிற்கிறது நிர்மலா நர்சிங்ஹோம்.

இனிதான் பணம் சேர்க்க வேண்டும் என்ற அவசியமோ, இன்னும் சேர்க்க வேண்டும் என்ற வெறியோ இல்லாமல் பல்வேறு தொழில்களில் பல கோடி முதலீடு செய்திருக்கிற கோயம்புத்தூர் தொழிலதிபரான சபாநாயகத்தின் இரண்டே பெண் குழந்தைகளில் மூத்தவள் டாக்டர் நிர்மலா. இளையவள் பி.டி.எஸ். படித்திருக்கிறாள். கணவருடன் இங்கிலாந்தில் இருக்கிறாள்.

நிர்மலாவின் கணவன் டாக்டர் சேகரின் குடும்பமும் சாதாரண குடும்பமில்லை. வண்ணார்பேட்டையில் அவர்கள் வாங்கிப் போட்டிருக்கிற ஏக்கர் கணக்கான நிலமும் எண்ணெ சுத்திகரிப்பு நிலையம், கடலைப் பருப்பு கடலை எண்ணெ நிறுவனம் ஜவுளிக் கடைகள் எல்லாமுமாய் சபாநாயகத்திற்கு இணையான செல்வந்தர் தான் இராமலிங்கமும். இரண்டு மனைவி, நான்கு குழந்தைகள். டாக்டர் சேகர் கடைசி மகன். செல்லமாய் வளர்ந்த பிள்ளை. வளர்ந்த இடம் வடசென்னை என்பதால் கொஞ்சம் துடுக்கு என்றாலும் படிப்பிலும் தொழிலிலும் படுகெட்டி. நல்ல பெயரும்கூட.

பார்த்து விசாரித்து பொருத்தம் பார்த்து நிதானமாக யோசித்து திருப்தியாக முடித்து வைத்த திருமணம். திருமணத்திற்கு வந்திருந்தவர்களெல்லாம் மணமக்கள் ஒருவருக்காக ஒருவர் செய்து வைத்தாற்போல் அத்துணை பொருத்தமென்று வியந்து பாராட்டியிருக்கிறார்கள்.

பல நேரங்களில் சூப்பர் பையனுக்கு சுமாரான பெண்ணும் அழகான பொண்ணுக்கு மொக்கை பையனும் அமையும். இங்கே ரெண்டு பேரும் 'மேட் ஃபார் ஈச் அதர்' என்று வந்திருந்த உறவுக்காரர் ஒருவர் சபாநாயகத்தின் காதைக் கடித்தது அருகிலிருந்தவர்களுக்கும் கேட்டிருக்க வேண்டும். உண்மைதான் என்று அன்று வழி மொழிந்தனர் அவர்கள்.

தமிழ்நாட்டுப் பிரமுகர்கள் மட்டுமல்லர் வடஇந்திய அரசியல், சினிமாப் புகழ்களும் வந்து நிறைந்து வாழ்த்திய மணமக்களின் வாழ்க்கை இரண்டாண்டுகள் கூட நிறையவில்லை. பிணக்கு ஏற்பட்டுவிட்டது.

“முன்பெல்லாம் பெண்கள் ஆண்களுக்கு அடங்கியிருந்தார்கள். ஏதாவது ஒரு வகையில் நாம் ஆணைச் சார்ந்திருக்கிறோம் என்ற அச்சம் பெண்களிடம் ஒரு சகிப்புத் தன்மையையும், விட்டுக் கொடுக்கிற மனப்பான்மையும் வளர்த்தது. ஆனால் இப்போது ‘உனக்கு நான் எந்த வகையில் குறைந்து போய்விட்டேன்’ என்ற உயர்வு மனப்பான்மை வந்துவிட்டது. சமமாக இருக்கிற தராசுத் தட்டு அங்குமிங்கும் அலைபாய்ந்தது போல் ஆடிக் கொண்டிருக்கும். அதை நிறுத்த ஒரு தட்டில் அதிகமான எடையைப் போடுவது வழக்கம். சமமாக இருப்பது என்பது எப்போதுமே சங்கடம்தான். ஒன்று அதிகமாயிருந்தால்தான் ஒன்று ஒன்றில் அடங்கும்.”

என்று சபாநாயகத்தின் 97வயது தந்தை சத்யமூர்த்தி சொன்னது கூட சரிதான் என்று சபாநாயகத்துக்குப்பட்டது. தன்னுடைய மகள் நிர்மலா தன் கணவனை சில நேரங்களில் எடுத்தெறிந்து பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை. கண்டித்துப் பார்த்தும் பயனில்லை.

காசு பெறாத விஷயம் மருத்துவமனைக்கு முன்னால் விசாலமாக இருந்த ஒரு இடம் ஒரு அழகான நீரூற்றை அமைத்து அந்த விசாலமான தொட்டியில் மீன்களை விட வேண்டும். பார்க்க அழகாக இருப்பதுடன் வருகிறவர்களும் நின்று வேடிக்கை பார்த்து மகிழ்வார்கள் என்றாள் டாக்டர் நிர்மலா.

கார்களின் பெருக்கம் நகரத்தில் அதிகமாகிவிட்டது. எல்லோரும் காரில்தான் வருகிறார்கள் போகிறார்கள். சாலைகளில் நிறுத்தி சங்கடப்படுவதைவிட உள்ளே தாராளமாக நிறுத்திக் கொள்ளலாமே என்பது டாக்டர் சேகரின் விருப்பம்.

இறுதியில் நீரூற்றுதான் வென்றது. இந்தக் குடும்பத்தில் எனக்கென்ன மரியாதை இருக்கிறது என்று சேகர் குதிக்க, தான் சொல்வதுதான் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்று எதிர்பார்ப்பது மட்டுமல்ல திணிக்க முற்படுவது ஆணவமில்லாமல் வேறெது என்று நிர்மலா உறுதியாக இருக்க, சம்பந்திகளும் நீரூற்றின் பக்கமே நியாயம் இருப்பதாக நின்றதில் சேருக்கு ரொம்பவே வருத்தம்..

காசு பெறாத சிறிய சிறிய விஷயங்களுக்கெல்லாம் வாதவிவாதங்கள் வளர்ந்து விகாரமாக விவாகரத்து வரை போய்விட்டது. நிர்மலாவும் சேகரும் பரஸ்பரம் சம்மதத்துடன் மணமுறிவுக்கு மனு செய்திருக்கிறார்கள். ஓராண்டு காத்திருக்கச் சொல்லியிருக்கிறது குடும்ப நீதிமன்றம். இருவரின் வெறுப்புக் கோபமும் வளர்ந்ததை விட வேகமாக மருத்துவமனையும், பெயரும், வருமானமும் பெருகிப் போனதாலும் இரண்டு குடும்பத்திலிருந்தும் ஏராளமாக முதலீடு செய்து இயக்குநர்களாகப் பலர் இருப்பதாலும் குடும்பங்கள் பிரியாமல், பகை பாராட்டாமல் ஒன்றாக இருந்து கொண்டிருந்தன. நிர்மலா – சேகர் ஒற்றுமை குறித்து முயற்சி செய்யாத, பேச்சு வார்த்தைகளில் இறங்காத உறவுகளே கிடையாது. இரண்டு பேரும் அசைந்து கொடுக்காமல் பிரிகிற நாளைப் பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தொழில் ரீதியாக சந்திக்கும் போதும், மருத்துவம் பார்க்கும் போதும், சம்பந்தம் இல்லாதவர்கள் போலவும், நண்பர்கள் போலவும் நடந்து கொள்வது விசித்திரமாகவே இருந்தது பலருக்கு. இன்னமும் நிர்வாக இயக்குநரான டாக்டர் சேகரின் அறையிலும், இயக்குநரான டாக்டர் நிர்மலாவின் அறையிலும் இருவரும் சேர்ந்திருக்கிற படம்தான் அழகாகப் பெரிதாக மாட்டப்பட்டிருக்கிறது.

## 4


‘அமைச்சர் இன்னும் அரைமணி நேரத்தில் அங்கிருப்பார்’ என்று அவருடைய உதவியாளர் தொலைபேசியிருந்ததால் அவரை வரவேற்க எல்லோருமே கீழே வரவேற்பு ஹாலில் காத்திருந்தார்கள். கணவன் மனைவியாக சேகரும் நிர்மலாவும் ஒவ்வொருவரையும் வணங்குவதும், வாழ்த்துவதும், கைகுலுக்குவதுமாக அத்துணை உற்சாகமாக இருந்தார்கள். இடையிடையே இருவரும் பேசுவதும், சிரிப்பதும் தோளில் கை போட்டுக் கொள்வதுமாய்... யாரும் நம்ப மாட்டார்கள், இவர்களிருவரும் மணமுறிவுக்குக் காத்திருக்கிறார்கள் என்றால்.

நாலைந்து வீடியோ கிராபர்கள் நிகழ்ச்சியைப் படம்பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு வீடியோ கிராபர் மட்டும் சேகர் – நிர்மலா தம்பதியரை பிரத்யேகமாகப் படமெடுத்துக் கொண்டிருந்தார். இது

பேரி இனக்காய் (PEAR) வடிவில் உருவாக்கப்பட்ட இந்த வெள்ளிக் குடுவை கடந்த அக்டோபரில் லண்டன் போன்ஹாம்ஸ் ஏல நிறுவனத்தில் விற்பனைக்கு வந்தது.

கைப்பிடியில் பாம்பு ஒன்று சுற்றிக் கொண்டிருக்க மகுடி ஊதும் பாம்பாட்டி, மூடியில் சிங்கம், குடுவையில் யானை மற்றும் பறவைகள் என ஏகப்பட்ட வேலைப்பாடுகளைக் கொண்டது இந்த வெள்ளிக் குடுவை. இது 19 ஆம் நூற்றாண்டின் கடைசி பத்தாண்டுகளில் OMERSI MAWIJI என்ற அரண்மனைப் பொற்கொல்லரால் உருவாக்கப்பட்டது. கட்ச் பகுதியைச் சேர்ந்த மன்னர்களின் காலத்தில் இது உருவானது..

- க. ரவீந்திரன்



நிர்மலாவின் தந்தை சபாநாயகத்தின் ஏற்பாடு. அவரும் ராமலிங்கமும் தம் துணைவியருடன் நிர்மலா – சேகரின் நெருக்கத்தையும், அன்பு இங்கிதம் குறித்த பண்புகளையும் உள்ளூர ரசித்ததோடு அவ்வப்போது கண்களில் துளிர்க்கிற நீர்திவலைகளைத் துடைத்த வண்ணமிருந்தனர். இன்றிலிருந்தாவது இவர்களிருவரும் எல்லாவற்றையும் மறந்துவிட்டு இணைந்து கொள்ள வேண்டுமே என்று எல்லா தெய்வங்களையும் வேண்டிக் கொண்டிருந்தனர்.

சரியாகப் பத்துமணிக்கு நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுரேஷ் பாலகிருஷ்ணனின் கார் மருத்துவமனைக்குள் நுழைந்தது. வெடிகளின் சப்தத்தோடு போலீஸ் பாண்ட் வாத்திய முழக்கமும் இணைந்து கொண்டதில் யார் யாரிடம் என்ன பேசுகிறார்கள் என்றே காதில் விழவில்லை. சேகர் மாலையிடவும், நிர்மலா பூங்கொத்து வழங்கவுமாய் அமைச்சரை வாசலிலேயே வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று பன்னீர் தெளித்து எட்டாவது மாடியிலுள்ள சேர்மன் அறைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சில மணித்துளிகள் கழித்து அருகிலேயே

உருவாக்கப்பட்ட புற்றுநோய் சிறப்புப் பிரிவைத் திறந்து வைத்துவிட்டு ஆடிட்டோரியத்திற்கு அழைத்து வரப்பட்டார் அமைச்சர்

குறித்த நேரத்தில் நிகழ்ச்சி தொடங்கியது. நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுரேஷ் பாலகிருஷ்ணனும் கோவையில் புகழ் வாய்ந்த மருத்துவர். சொந்தமாக மருத்துவமனையும் நடத்துகிறார். சேகருடன் படித்தவர். புற்றுநோய் தொடர்பான பல செய்திகளைப் பகிர்ந்து கொண்டு யாரும் அதற்கு அஞ்சத் தேவையில்லை என்று நம்பிக்கையூட்டுகிற பொழிவொன்றை நிகழ்த்தி பிரமாதப்படுத்திவிட்டார். தன்னுடைய பேச்சுக்கு சிகரம் வைத்தாற் போல "நல்ல மருத்துவர்கள் நல்ல மனிதர்களாக இருப்பதில்லை. ஆனால் சேகரும் நிர்மலாவும் நல்ல மனிதர்கள், நல்ல மருத்துவர்கள்" என்று ஒரு கருத்தைச் சொல்லி பலத்த கரவொலியைப் பெற்றுக் கொண்டார்.

"பெரும்பாலான மருத்துவர்களின் அறிவும், அனுபவமும் இயங்குமே தவிர இதயம் இயங்குவதில்லை. எங்கள் சேகரும் நிர்மலாவும் மருத்துவத்திறனும், மானுட மாண்புகளும் வாய்க்கப் பெற்றவர்கள். தென் சென்னையில் எத்தனையோ பெரிய மருத்துவமனைகள் இருந்த போதும் எங்கள் அய்யா சபாநாயகம் அவர்களுக்கு மதுரவாயலில் மூன்று ஏக்கர் நிலமிருந்தபோதும் அங்கெல்லாம் எண்ணாமல் இங்கே வடசென்னையில் ஏழை எளிய, நடுத்தர மக்களுக்குப் பயன்படவேண்டும் என்று அதிகக் கட்டணம் இல்லாமலும் சிலருக்குக் கட்டணமே இல்லாமலும் மருத்துவ வசதிகள் செய்து தர இந்த மருத்துவமனையைக் கட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் அவரை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

நண்பர் டாக்டர் சேகர் என் வகுப்புத் தோழர். இருவருமே ஒன்றாக சென்னை மருத்துவக் கல்லூரியில் படித்தோம். படிப்பில் புலி அவர். மருத்துவப் படிப்பின் நிறைவுத் தேர்வில் தங்க மெடல் பெற்றவர். தங்கமான ஒரு தோழியைத் தன் தாரமாகவும் பெற்றவர். அவர் பண்பாளர். பழகுவதற்கு இனியவர். சேவை மனப்பான்மை கொண்டவர். இப்படியொரு கணவர் கிடைக்க நிர்மலா கொடுத்து வைத்திருக்க வேண்டும். இருவருமே ஒருவருக்கொருவர் இறைவனால் வழங்கப்பட்ட பரிசுகள். மேட்ஃபார் ஈச் அதர் என்றால் அது இவர்களுக்கே மிக அதிகமாகப் பொருந்தும். இந்தப் பாசப் பிணைப்பு,

பயனும், வளர்ந்து செழித்து இவர்கள் நூறாண்டு வாழ வேண்டும். தலைமுறை தலைமுறையாக இந்த மருத்துவத் தொண்டும் தொடர வேண்டும்..."

என்றெல்லாம் வாழ்த்தி அமர்ந்தார். அவருக்கெங்கே தெரியும். அவர்கள் இருவரும் மணமுறிவுக்காகக் காத்திருக்கிறார்கள் என்று.

## 5

நிர்மலா நர்சிங்ஹோம் புற்று நோய்ப் பிரிவு தொடக்க விழா செய்திகள் நாளிதழ்கள் பலவற்றில் பிரமாதமாகப் படங்களுடன் வெளியாகியிருந்தன. ஜெனரல் மேனேஜர் முரளியின் பத்திரிகைத் தொடர்பில் நிர்வாகம் பெரிதும் மகிழ்ந்திருந்தது. விழாப் படங்கள் நாலைந்து பெரிய ஆல்பங்களாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அவருடைய அந்த வேகம் பிரமிப்பூட்டியது. இப்போதெல்லாம் பணத்தை வீசியெறிந்தால் எல்லாமும் நடக்கிறது என்பதில் சபாநாயகத்திற்கு வியப்பே கிடையாது.

தொடர்ந்து சில வார மாத இதழ்களில் சேகர் நிர்மலா ஆகியோரின் நேர்காணல்கள் வெளியாகின. தொலைக்காட்சி ஊடகங்களிலும் சில நாட்கள் அவர்களே வியாபித்திருந்தனர். இருவரையும் சேர்த்துப் பார்த்த யாரும் நம்ப மாட்டார்கள், இருவருக்குமிடையே ஒரு விரிசல் இருக்கிறது என்பதை. விவகாரம் முற்றி விவாகரத்து வரை போயிருக்கிறது என்று தெரிந்தவர்களுக்கு மட்டுமே தெரியும்.

நிகழ்ச்சியைத் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் தொலைபேசி அழைப்புகளாலும் கடிதங்களாலும், விழாவுக்கு வரமுடியாதவர்களின் வருகையாலும் திக்குமுக்காடிப் போய்விட்டார்கள் நிர்மலாவும் சேகரும். வீட்டிலிருக்கிற மூத்த பெண்கள் சேகருக்கும் நிர்மலாவுக்கும் திருஷ்டி கழித்த வண்ணமிருந்தனர். எல்லாம் நல்லவிதமாக நடந்த மகிழ்ச்சியிலும் வேண்டுதலிலும் திருப்பதிக்கும் புதுச்சேரி அரவிந்தர் சமாதிக்கும் சென்று வழிபட்டு வந்தனர். திருப்பதிக்குக் குடும்பத்தோடு போனார்கள். புதுச்சேரிக்கு சேகரும் நிர்மலாவும் தனியாகச் சென்று

வந்தார்கள். சேகர்தான் காரை ஓட்டிச் சென்றான்.

புதுச்சேரிக்குப் போகும் வழியில் மாமல்லபுரம் கிழக்குக் கடற்கரைச் சாலையில் ஒரு உணவு விடுதியில் காலை உணவுக்காக காரை நிறுத்தினான் சேகர். சேகரே ஆர்டர் செய்தான். நெடுநேரம் இருவரும் பேசவில்லை. சேகரே அமைதியைக் கலைத்தான்.

**ஜோ**ர்டான் நாட்டில் பழமையான நகரமான பீட்ராவில் உள்ள கருவூலக் கோயில் (அல்-கஜானா).

- க. ரவீந்திரன்



"நிர்மலா..., பேசக்கூடாதா...?"

"என்ன பேசறது... எல்லாத்தையும் நீங்கதான் பேசிடுறீங்களே!"

"இன்னும் கோபத்தோட தான் இருக்கியா?"

"சேச்சே..... உங்கமேல எனக்கென்ன கோபம்...!"

"கோபம் இன்னும் இருக்கு.. ஒரு விஷயம் தெரியுமா... உன்னோட கோபமும் உனக்கு ஒரு அழகுதான்."

"போதும்... போதும்..."

"சரி... நிர்மலா... உன்னோட எதிர்காலத்தைப் பத்தி யோசிச்சியா..."

"அதுக்கெல்லாம் எனக்கு நேரமில்ல. கடவுள் விட்டபடி நடக்கட்டும். எனக்காக நீங்க

எதுவும் யோசிக்க வேண்டாம். நீங்க உங்க எதிர்காலத்தைப் பத்தி மட்டும் யோசிங்க போதும்...”

எடுத்தெறிந்து பேசிய நிர்மலாவிடம் வேறென்ன பேசுவது என்று விட்டுவிட்டாலும் சேகருக்கு என்னவோ போல்தான் இருந்தது. காலை உணவை முடித்து விட்டு வெளியே வந்தார்கள். கார் கல்பாக்கத்தைத் தாண்டியதும் சேகர் சற்று சோர்ந்திருப்பதைப் பார்த்த நிர்மலா, கொஞ்சம் ஆறுதலாகப் பேசத் தொடங்கினாள். என்ன இருந்தாலும் பெண்ணல்லவா அவள்...

“சேகர், டோன் ஒரி அபௌட் எனிதிங். நர்சிங்ஹோம் நிர்வாகத்திலே எந்தக் குளறுபடியும் இருக்காது. டைரக்டர்ஸ்ங்கிற முறையிலே நாமும், பெரியவங்களும் பார்த்துக்க முடியுங்கிற நம்பிக்கை எனக்கிருக்கு. உங்களுக்கு வேற கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசையாயிருந்தா தாராளமா பண்ணிக்கலாம்.”

“அப்படீன்னா... உனக்கு அந்த மாதிரி ஆசை இருக்கா?”

“இப்போதைக்கு இல்ல...”

“அப்படீன்னா... எதிர்காலத்திலேயே... அதைப் பத்தி யோசிப்பியா?”

“தெரியாது.. அதெல்லாமிருக்கட்டும். ரோட்டைப் பார்த்து ஓட்டுங்க. டோண்ட் பி. எமோஷனலி அப்செட்...”

என்று நிர்மலா சொன்னாலும் சேகர் குமையத் தொடங்கினான். ஐந்தாறு நிமிடங்கள் கழித்து அவளே சீண்டினாள்.

“என்ன ஆச்சு... மூட் அவுட் ஆகிட்டீங்களா... பாண்டிச்சேரியில மதர்கிட்டே வேண்டிக்கங்க. நிம்மதி கிடைக்கும்.”

சேகர் அதற்குப் பிறகு அவளிடம் எதுவும் பேசவில்லை. அந்த அமைதி ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை சமாதிக்கு முன் அமர்ந்திருந்த ஒரு மணிநேரம் தொடர்ந்தது.

என்ன வேண்டிக் கொண்டார்கள்... ஸ்ரீ அரவிந்தருக்கும் ஸ்ரீ அன்னைக்கும் மட்டுமே தெரியும்.

# 6

ஒரு அதிகாலை நேரம். புற நோயாளிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான் சேகர். இன்டர்காம் ஒலித்தது. எடுத்தான். எதிர்முனையில் நிர்மலா.

"நான்தான் பேசறேன். டயபடிக் டிபார்ட்மெண்டிலே உங்க ஃபிரண்ட் டாக்டர் ரோஹித்தை அப்பாய்ன்ட் பண்ணியிருக்கீங்களாமே!"

"ஆமா... பண்ணியிருக்கேன். மாமாகிட்டே, ஐ மீன் சேர்மன்கிட்டே பேசிட்டுத்தான் பண்ணினேன். டாக்டர் ரோஹித் என்னோட பேட்ஜ் மேட் ஒண்ணாப் படிச்சோம்."

"ஒண்ணா படிச்சவர்ங்கிறது ஒரு தகுதியா...?"

"இதுக்கு நான் என்ன பதில் சொல்றது... டாக்டர் ரோஹித்தை எனக்குத் தெரியும். பர்பஃக்ட் ஜென்டில்மேன். டெய்லி விசிட் மட்டுமல்ல, ஓ.பி.யையும் பார்த்துக்கச் சொல்லியிருக்கேன்."

"சரி... போகட்டும். அவர் உங்களோட தங்கலியே...!"

"இல்ல..."

"தனியா இருக்கறேன். கம்பெனி வேணும்னு அவரைக் கூடவே தங்க வச்சிக்காதீங்க. படிக்கும் போதே அவருக்கு கொஞ்சம் லிக்கர் பழக்கம் உண்டு. சீனியர்ஸ் சொல்லியிருக்காங்க. அதுக்காக இப்பவும் குடிப்பார்ன்னு சொல்ல முடியாது. எனி ஹவ். கவனமா இருங்க. சரி... சாப்பாடெல்லாம் எப்படி இருக்கு. புதுசா சமையலுக்கு ஒரு ஆயா வேலைக்கு சேர்ந்திருக்காங்க. பேசாம நீங்க நம்ம பெசன்ட் நகர் வீட்டிலேயே தங்கிக்கலாம். ஆனா மாட்டேன்னு அடம்பிடிக்கிறீங்க. அது உங்க பிறவிக் குணம். அதிருக்கட்டும் ஒரு விஷயம் கேள்விப்பட்டேனே உண்மையா...! கவிதை எழுதறீங்களாமே... என்ன திடீர்னு."

"திடீர்னு ஒண்ணுமில்ல. காலேஜிலே படிக்கும்போதே ஒண்ணு ரெண்டு எழுதியிருக்கேன்."

"ஒரு காதல் கவிதையாவது எழுதித் தந்திருப்பீங்களா, எனக்கு..."

"அதுக்கெல்லாம் எங்கே நேரமிருந்தது. காலேஜுக்குப் போகவும்

கடலை போடவுமே நேரம் சரியா இருந்தது... இப்ப கொஞ்சம் ஓய்வு கிடைக்கிது எழுதறேன்"

"கவிதை எழுதுங்க... பரவாயில்ல. ஆனா தண்ணியடிக்க ஆரபிச்சிடாதீங்க."

நீண்ட நேரமாக சேகருடன் பேசுவதற்காக சபாநாயகம் முயற்சி செய்து தொடர்பு கிடைக்காமற் போகவே மகளுக்கு தொலைபேசி இணைப்பு கிடைக்கிறதா என்று பார்த்ததில் அதுவும் இணைப்பில் இருந்தது. நீண்ட நேரமாக இருவரும் பேசிக் கொண்டிருப்பதாக டெலிபோன் ஆபரேட்டர் சொன்னது மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

"இந்த ரெண்டுபேரும் அப்படி என்னதான் பேசிட்டிருப்பாங்களோ... இதுகளைப் பார்த்தா டைவர்ஸ் பண்ணிக்கப் போற மூஞ்சிகள் மாதிரியா இருக்கு...."

என்று கூடவே இருந்த சம்பந்தி ராமலிங்கத்திடம் கிண்டலடித்தார் சபாநாயகம்.

"என்னமோ சம்பந்தி... எலியும் பூனையுமா அடிச்சிக்கிறாங்க. பிறகு அத்தனை ஃபிரண்ட்லியா பேசிக்கிறாங்க. டைவர்ஸ் ஆனபிறகு எப்படி ஒருத்தரை யொருத்தர் பிரிஞ்சி இருக்கப்போறாங்களோ, மறக்கப் போறாங்களோ......

"அதெல்லாம் இருப்பாங்க. பேசுவாங்க. பொழுது போக்கிக்குவாங்க. கேட்டா நாங்க இப்ப ஃபிரன்ட்ஸ் மாதிரிம்பாங்க. என்ன ஃபிரண்ஷிப்போ, எழவோ!



**தா**ய்லாந்தில் உள்ள RAI LEH கடற்கரையில் PHRA NANG சுண்ணாம்புக்கல் பாறைகளின் தோற்றம்.

- க. ரவீந்திரன்

எதுக்காக நிர்மலாவைப் படிக்க வச்சோம்னு கூட சில நேரங்கள்ல நினைக்கிறேன். படிக்காம ஒரு சாதாரண குடும்பப் பெண்ணா, கிராமத்துப் பெண்ணா இருந்திருந்தா அடக்க ஒடுக்கமா இருந்திருப்பா. உனக்கு நான் சமம். உன்னை விட நான் எந்தவகையிலும் குறைஞ்சிப் போயிடலேங்கிற ஈகோதான் இப்படி டைவர்ஸ் வரை கொண்டு வந்து விட்டிருக்கு. எனக்கென்னவோ உங்க குடும்பத்திலே இவளாலே ஒரு சங்கடத்தை ஏற்படுத்திட்டோமோன்னு கவலையா இருக்கு. என்ன பொண்ணு இவ. அனுசரிச்சிப் போக மாட்டேங்கிறாளே."

"அப்படியெல்லாம் நிர்மலா மேலே அபாண்டமா பழிபோடாதீங்க சம்பந்தி. இந்தக் குழப்பத்திலே என் பையனோட பங்கும் இருக்கு. வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க. எல்லாம் கடவுள்விட்டவழி நடக்கும்."

"நடந்தா சந்தோஷம்.. அதிருக்கட்டும். சாயங்காலம் ஆடிட்டர் ராமநாதன் வர்றேன்னு சொல்லிட்டிருந்தார். நீங்களும் கூட இருந்தீங்கன்னா கொஞ்சம் ஒத்தாசையா இருக்கும்."

சம்மதித்து... விடைபெற்றுக் கொண்டார் ராமலிங்கம்.

## 7

டாக்டர் சேகரும் டாக்டர் கிரிஜாவும் குழந்தைகள் வார்டைச் சுற்றி வருகிறார்கள். ஒவ்வொரு குழந்தையாகப் பார்த்து வாழ்த்துவதும் கன்னத்தைக் கிள்ளி உற்சாகப்படுத்துவதுமாய் அவர்களுக்குத் தரப்படும் மருத்துவம் குறித்து விசாரித்துக் கொண்டே போகிறான் அவன் குழந்தைகளின் பெற்றோர்கள் அவனுக்கு வணக்கம் செலுத்தி மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்கள்.

அங்கே நிர்மலா சேகரின் பெசன்ட் நகர் வீட்டில் சமையற்கார அம்மாவாகப் பணியாற்றும் ருக்மணியம்மா தன் பேத்தியை அனுமதித்து விட்டு துணையாகத் தங்கியிருக்கிறாள். சேகரைப் பார்த்து வணக்கம் தெரிவிக்கிறாள்.

"ருக்மணியம்மா.. நல்லா இருக்கீங்களா...?"

“நான் எதுக்கய்யா நல்லா இருக்கணும். நீங்கதான் நல்லா இருக்கணும். நீங்களும் டாக்டரம்மாவும் தான் நல்லா இருக்கணும். நான் போக வேண்டிய கட்டை...”

“அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. எல்லாரும் நல்லா இருக்கணும். உன் பேத்தி சாந்தி நல்லா குணமாயிட்டா. இன்னிக்கு சாய்ங்காலம் டிஸ்சார்ஜ் ஆகலாம். கீழே கவுண்டர்ல சொல்லியிருக்கேன். நீங்க பணம் எதுவும் கட்ட வேண்டாம். அத்தோட ஒரு வாரம் வேலைக்கும் வர வேணாம். சாந்தியை வீட்டிலேயே இருந்து நல்லா கவனிச்சுக்கங்க. அடுத்தவாரம் அவ ஸ்கூலுக்குப் போகலாம். நீங்களும் வேலைக்கு வரலாம்.”

“அய்யா.. இவ்வளவு நல்ல மனுஷங்களா இருக்கீங்களே. உங்களுக்கா கடவுள் இத்தனை கஷ்டத்தைத் தரணும்...?”

“கடவுள் எல்லோருக்கும் எல்லாத்தையும் கொடுக்க மாட்டான் ஆயா. கொடுக்கவும் கூடாது. கொடுத்தா மனுஷனுக்குத் திமிர் ஏறிடும். அங்கங்கே இப்படி ஒரு ‘செக்’ இருந்தாதான் சரியா இருப்பான். இது எனக்கு ஒரு செக். அவ்வளவுதான். எவ்வளவு கஷ்டமிருந்தாலும் கடவுள் மாதிரி அன்பு காட்ட, வாழ்த்த நீங்க இருக்கீங்களே.... போதாதா!”

அப்போது டாக்டர் கிரிஜாவின் கைபேசி ஒலிக்கிறது. அழைப்பை ஏற்கிறாள்... ‘சரி’ என்று சொல்லி விட்டு சேகரைப் பார்க்கிறாள்.

“நிர்மலா மேடம் கூப்பிடுறாங்க... இதோ வந்திடுறேன்” என்று விடைபெற்றுக் கொண்ட ஐந்தாவது நிமிடம் நிர்மலாவின் அறையில் வந்து நின்றாள் டாக்டர் கிரிஜா. அவளை அமருமாறு சைகை காட்டிய நிர்மலா பத்து பதினைந்து நிமிடமாக எதுவும் பேசாமல் ஏதோ சில படிவங்களைப் பார்ப்பதும் கையெழுத்து போடுவதுமாக இருந்தாள். நிசப்தமான அந்த அறையில் சுவர்க் கடிகாரத்தின் ‘டிக் டிக்’ என்ற ஒலி மட்டும் இருந்தது. அவ்வப்போது கிரிஜாவின் முகத்தைப் பார்ப்பதும் தன் வேலையில் ஈடுபடுவதுமாயிருந்த நிர்மலாவிடமிருந்து ஏதோ ஒரு பெரிய அணுகுண்டு வெடிக்கப் போகிறது என்பதை மட்டும் கிரிஜா யூகித்துக் கொண்டாள். கிரிஜாவே அந்த மௌனத்தை உடைக்கிறாள்.

“ஏதோ அவசரமா பேசணும்னு கூப்பிட்டீங்களே மேடம்?”



அமிர்தசரஸில் சிறப்பான தலைப்பகை அணிந்த ஆண்களின் உலகளாவிய போட்டி நடந்தது. இதில் விதவிதமான தலைப்பகைகளோடு (டர்பன்) பலர் கலந்துகொண்டனர்.

- க. ரவீந்திரன்

"அவசரமாத்தான் கூப்பிட்டேன். ஆனா எப்படித் தொடங்கறதுன்னு தெரியல."

என்று மீண்டும் தன் பணிகளில் ஈடுபடத் தொடங்குகிறாள். அவளுடைய டேபிளில் இருக்கிற குளோஸ்ட் சர்க்யூட் கருவியின் காட்சித் திரையில் குழந்தைகளுக்கான பிரிவில் டாக்டர் சேகர் பார்த்துக் கொண்டிருப்பது தெரிகிறது. கிரிஜாவுக்கு ஓரளவு விளங்கியது. நிர்மலா பேச்சைத் தொடர்ந்தாள்.

"நான் என்னோட வாழ்க்கையிலே புதுசு புதுசா சில அனுபவங்களே சந்திக்கிறேன். இதெல்லாம் நான் இதுவரை அனுபவிக்காதது. இதெல்லாம் ஏன் எனக்கு நடக்குன்னே தெரியலே..."

"நானும் கேள்விப்பட்டேன்"

"நீங்க கேள்விப்பட்ட விஷயத்தை டிஸ்கஸ் பண்ண உங்களை நான் கூப்பிடலே. நான் சந்தேகிக்கிற ஒரு விஷயத்தை.. அது உண்மையா இருக்கக் கூடாதேங்கிற பயத்திலே, ஆதங்கத்தில் உங்களை தனியா சந்திச்சு பேசக் கூப்பிட்டேன். சுத்திவளைக்காமலும் உங்க நேரத்தையும் வீணடிக்காமலும் நேரடியாவே விஷயத்துக்கு வந்திடுறேன். டூ யூ லவ் டாக்டர் சேகர்? சேகரை நீங்க விரும்புகிறீங்களா...?"

கிரிஜா அதிர்ந்துவிட்டாள். என்றாலும் சமாளித்துக் கொண்டு,

"மேடம் இப்படியொரு கேள்வியைக் கேட்கறதைவிட என்னை நீங்க சூட் பண்ணியிருக்கலாம். அல்லது இந்த பால்கனியிலிருந்து தள்ளி விட்டிருக்கலாம்.

இப்படியெல்லாம் சந்தேகப்பட உங்களுக்கு எப்படி மனசு வருது மேடம். சேகர் உங்க கணவர்." படபடவென்று வெடித்துத் தள்ளினாள் கிரிஜா. அப்போதும் நிதானத்தை இழக்காமல் தொடர்ந்தாள் நிர்மலா..

"கணவர்.. இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான். ரெண்டுமூணு வாரத்தில சட்ட பூர்வமா பிரிஞ்சிடுவோம். அதுக்குப் பிறகு நீங்க அவரைக் கூட்டிட்டு ஓடலாம் அல்லது கல்யாணம் பண்ணிக்கலாம். அதுவரை எந்த கிசு கிசுக்களும் வராமலும், அசம்பாவிதங்கள் நடக்காமலும் பார்த்துக்கங்க."

"மேடம்.. என்னை, நீங்க வேலையைவிட்டு வெளியே அனுப்பறதுக்கு வேற ஏதாவது காரணங்கள் கண்டு பிடிச்சிருக்கலாம். அல்லது என்னை ராஜினாமா பண்ண நேரடியாவே சொல்லியிருக்கலாம். அதையெல்லாம் விட்டுட்டு இப்படி அபாண்டமா பழிபோடறது நல்லா இல்ல. நானும் ஒரு டாக்டர் தான். வேற எங்கேயாவது போய் வேலைக்குச் சேரமுடியும். அல்லது உங்க அளவுக்கு இல்லேன்னா கூட எங்க வசதிக்கு ஒரு நர்சிங் ஹோம்கூட தொடங்க முடியும்.."

"கிரிஜா டோன்ட் பி அப்செட். எனக்கு இதை எப்படி சொல்றதுன்னு புரியலே. இப்படி யெல்லாம் நடக்குதுன்னு நான் சந்தேகப்படலே, ஆனா நடந்திடக்கூடாதேன்னு பயப்படுறேன்.

"நடக்காது மேடம். டாக்டர் சேகர் ஒரு அற்புதமான மனிதர். அவருடைய ஈடுபாடு ஆர்வமெல்லாம் மருத்துவம் தான். மருத்துவம் மட்டும்தான். நீங்களே பாருங்க அவர் நல்லா வருவார். இ.என்.டி.ல அவர் சென்னையிலே குறிப்பிடத்தக்க ஒரு டாக்டர். சென்னையிலே அவர் நம்பர் ஒண்ணா கூட வந்திடுவார்... அவருக்கு இந்த மாதிரி சில்லியான எண்ணங்களே வராது, அவரை மாதிரி ஒரு கணவர் கிடைக்க நீங்க கொடுத்து வச்சிருக்கணும் மேடம். ஆனா உங்களுக்குத்தான் அவரோட அனுசரிச்சிப்போகத் தெரியல. அந்தக் கொடுப்பினையும் உங்களுக்கு இல்ல. சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. டைவர்ஸ் ஆன பிறகு தனியா இருக்கப்போற அவரை யாராவது விரும்பி ப்ரபோஸ் பண்ணினா கூட ஆச்சர்யப்படறதுக்கில்ல."

"நீங்க ப்ரபோஸ் பண்ணுவீங்களா?" கல்லூரி மங்கி மாதிரி நிர்மலா அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தாள். கிரிஜாவை அவள் விடுவதாக

இல்லை. மேலும் மேலும் எரிச்சலூட்டினாள். வேறு வழியில்லை. பதிலடி கொடுக்க வேண்டும். அவளுடைய திமிரை அடக்க வேண்டும் என்று கிரிஜாவும் ஒரு அதிர்ச்சியைக் கொடுத்தாள்.

"யாருக்குத் தெரியும்! அது அந்த நேரத்தைப் பொறுத்தது" என்று குண்டைத் தூக்கிப் போட்டுவிட்டு வெளியேறினாள் கிரிஜா. டாக்டர் கிரிஜா அந்த அறையை விட்டு வெளியே போனாலும் நிர்மலாவின் மனதை விட்டு வெளியே போகவில்லை. இன்னமும் அந்த சந்தேகம் நீடித்தது. "சேகரை இவள் தட்டிக்கொண்டு போய் விடுவாளோ" என்று குமைந்தாள்.

## 8

டாக்டர் சேகர் ஊரில் இல்லை. லண்டனிலிருந்து வந்த ஒரு பல்கலைக்கழக அழைப்பினை ஏற்றுச் சென்றிருந்த அவன் சென்னை திரும்ப இரண்டு வாரங்களாவது ஆகுமென்று சபாநாயகம் தான் நிர்மலாவிடம் சொன்னார். மாமனார் என்ற மரியாதை மட்டும் குறையவில்லை என்பதில் மகிழ்ச்சி என்றாலும் மனைவி என்கிற மதிப்பு இல்லையே என்று அவள் தந்தையிடம் குமுறாத நாளில்லை. இரண்டு வாரங்கள் வெளிநாடு போகிறாரே... சொல்லிவிட்டுப் போகாதது மட்டுமல்ல.... மருத்துவமனை எப்படி நடக்கிறது என்று இடையிடையே மனுஷன் போன் பண்ணிக் கூடவா கேட்கமாட்டார். அப்படியென்ன அழுத்தம்.. கல்நெஞ்சம். புரியாத புதிராக இருக்கிறானே.. சிலநேரம் குழைகிறான்.. அசடுவழிகிறான். கொதிப்பதும் குளிர்வதுமாய் எத்துணை விதமான குணாதிசயங்கள் என்று சேகரைப்பற்றி நிர்மலா மருகாத நாளே கிடையாது.

மாமனாரிடம் அடிக்கடிப் பேசுகிறான் சேகர். புதிதாக மார்பகப் புற்றுநோய் சிறப்பு மருத்துவராக வேலையில் சேரவேண்டிய டாக்டர் கோபாலமேனன் வந்து விட்டாரா என்று விசாரித்திருக்கிறான். மற்ற டாக்டர்கள் ஒழுங்காகப் பணிக்கு வருகிறார்களா என்றெல்லாம் விசாரிக்கிற சேகர், நிர்மலாவைப் பற்றிக் கேட்பதேயில்லை...

"அப்பா தினமும் அவர் உங்களுக்கு போன் பண்றாரே.. என்னைப்பத்தி ஏதாவது விசாரிக்கிறாரா" என்று ஆர்வத்தோடு ஒரு நாள் நிர்மலா கேட்டாள். இல்லையென்று சொன்னதும் அவளுடைய



1900 ஆம் ஆண்டு சீனாவில் அரசாங்க ஆதரவுடன் நடந்த பாக்ஸர் கலவரம் விவசாயிகளின் எழுச்சியாகும். சீனாவில் அந்த காலகட்டத்தில் ஒரு ரகசிய குழு செயல்பட்டு வந்தது. அதன் அங்கத்தினர்கள் தசையிறுக்கப் பயிற்சிகளையும் குத்துச்சண்டைப் பயிற்சியையும் மேற்கொண்டு வந்தார்கள். இவர்கள் பாக்ஸர்கள் என அழைக்கப்பட்டனர். பாக்ஸர்கள் சீனக் கிறிஸ்துவர்களையும் இதர மேற்கு நாட்டவரையும் கொன்றார்கள். இவர்களை ஒடுக்க பன்னாட்டு படை வந்தது. சீன அரசுப் படைக்கும் பன்னாட்டுப் படைக்கும் மோதல் வந்தது. இறுதியில் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி சீனா 11 நாடுகளுக்கு இழப்பீட்டுத்தொகை தர சம்மதித்தது. பாக்ஸர் சண்டையைச் சித்தரிக்கும் ஓவியம் இது.

- க. ரவீந்திரன்

முகம் சற்று வாட்டமடைந்தது. என்றாலும் அதையெல்லாம் எதிர்பார்க்க இனியென்ன உரிமை இருக்கிறது என்று தன்னைத்தானே ஆற்றுப்படுத்திக் கொண்டாள் நிர்மலா. நிர்மலா தன் எதிர்காலத்தை எப்படித் திட்டமிட்டிருக்கிறாள் என்று யாருக்கும் தெரியவில்லை. ஒருமுறை அவளுடைய தாயே அவளிடம் கேட்டிருக்கிறாள்.....

“அம்மா, எதைப்பத்தியும் நான் கவலைப்படல. நடக்கறமாதிரி நடக்கட்டும்.”

என்று மட்டும் சொல்லி நிர்மலா நழுவிக் கொண்டிருக்கிறாள். என்றாலும் அவளுடைய தாய் விடவில்லை.

“அதுவா எதுவும் நடக்கல நிர்மலா.. நீங்க ரெண்டுபேரும்தான் நடத்திட்டிருக்கீங்க. ரெண்டு குடும்பமும் கோடிக் கணக்கா முதலீடு

பண்ணி நடத்திட்டிருக்கற நிறுவனம் இது. இதைப் பெரியவங்க நடத்தறது ஒரு புறமிருக்கட்டும். கணவனும் மனைவியுமா நீங்களும் சேர்ந்து நடத்தினாதானே கௌரவமா இருக்கும்.. விவாகரத்து பண்ணிக்கிட்டு நீ யாரோ நான் யாரோன்னு எப்படி நடத்த முடியும். கொஞ்சம் பொறுத்துக்கக் கூடாதா.... ஒருத்தரையொருத்தர் அனுசரிச்சிக்கக் கூடாதா. உங்க முடிவுகளை மாத்திக்கங்கம்மா..."

"அம்மா! மனசுங்கிறது ஒரு மீன் தொட்டி மாதிரி. கீழே விழுந்து உடைஞ்சா அதை ஒட்டவைக்கமுடியாது. தூக்கி எறிஞ்சிட வேண்டியதுதான்."

"என்ன உதாரணம் இது!... நீ அந்தத் தொட்டியைத்தான் பார்க்கறே. ஆனா கீழே விழுந்து துடிச்சிக்கிட்டு இருக்கற மீன்கள் மாதிரி நாங்க தவிக்கிறது உனக்குத் தெரியலையாம்மா....?"

"வேற தொட்டி வரும்" என்று அலட்சியமாக நிர்மலா பதில் சொன்னதைப் பார்த்து அதிர்ந்து விட்டாள் அவளுடைய தாயார் கௌரியம்மா...

"வேற ஒரு தொட்டியா.. நீ ஏதாவது முடிவு பண்ணிவச்சிருக்கிறியா நிர்மலா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல. அந்த மீன்களுக்கு வேற தொட்டி வரும்ன்னு சொன்னேன் அம்மா. உங்களுக்கு நான் எப்பவும் ஆறுதலா இருப்பேன். அவரோட வாழ்ந்து தான் ஆறுதலா இருக்கமுடியும்னு அவசியமில்ல. வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க. இது உங்க காலம் மாதிரி இல்ல. எதைப் பத்தியும் யாரும் கவலைப்படாம எல்லாரும் இயங்கிக்கிட்டே இருப்பாங்க. யாரும் விட்டுட மாட்டாங்க. எதுவும் கெட்டும்போகாது. நீங்க இவ்வளவு பேசுறீங்களே.... அந்த ஆளு அதான் உங்க மாப்பிள்ளை, லண்டனுக்குப் போய் பன்னெண்டு நாளாகுது. மாமனாரோட பேசறார். டாக்டர்களுக்கு போன் போடறார்.. டாக்டர். கிரிஜாவோட கூட ரெண்டுதடவ பேசியிருக்கார். இன்னும் சில வாரங்களுக்கு அதாவது டைவர்ஸ் ஆகறவரை நான் மனைவிதானே. ஒரு வார்த்தை நல்லா இருக்கிறியான்னு என்கிட்டே கேட்க மாட்டாரா.. என்னை விடும்மா.. நர்சிங்ஹோம் எப்படி நடந்திட்டிக்குன்னு கேட்கத் தோணாதா.. கல்நெஞ்சக்காரர்."

“அவர் மட்டுமென்ன நீயும் தான் கல்நெஞ்சக்காரி, நிர்மலா! கேட்கறேன்னு தப்பா நினைக்காதே. நீயாவது பேசலாமில்லையா? அவரை சண்டைக்கு மட்டும் இழுப்பே. இப்பக்கூட நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரையொருத்தர் குறை சொல்றீங்களே தவிர, உங்க குறையை உணர்ற மாதிரி தெரியல. இது நீங்க தேர்ந்தெடுத்துக்கிட்ட வாழ்க்கை. அனுபவியுங்க...”

என்று எழுந்து வெளியேறினாள் கௌரியம்மா.

## 9

லண்டனிலிருந்து திரும்பிவந்து விட்டான் சேகர். அவனுடைய அறைக்கு ஒவ்வொருவராக வந்து நலம் கேட்பதும் பயண அனுபவங்கள், கலந்து கொண்ட நிகழ்ச்சிகள், படித்த மருத்துவக்கட்டுரைகள், பேட்டிகள் குறித்தெல்லாம் விசாரித்தவண்ணமிருந்தனர். நிர்மலாவை சபாநாயகமே அழைத்துவந்தார். இருவரும் ஒருவரோடொருவர் பேசவில்லை– வந்தவுடன் ‘ஹாய்’ சொன்னதைத் தவிர.

எல்லோரும் போனபிறகு......

“நிர்மலா, உனக்கு ஒரு கிஃப்ட் வாங்கிட்டு வந்திருக்கேன். பிடிச்சிருக்கா பாரேன்...”

வைரங்கள் பதித்த பிளாட்டினம் நெக்லஸ். சில லட்சங்களாவது அதன் மதிப்பிருக்கும். நிர்மலாவின் முகம் பிரகாசமடைந்தாலும் அதை அவ்வளவாகக் காட்டிக்கொள்ளவில்லை. செல்லமான கோபம் மட்டும் முகத்தில் படர்ந்திருந்தது. அந்த நகைப் பெட்டியை தந்தை சபாநாயகத்திடம் கொடுத்துப் பார்க்கச் சொல்கிறாள் நிர்மலா...


“நல்லா இருக்கு மாப்பிள்ளை... இதை விட நீங்க லண்டனிலிருந்து நிர்மலாவோட பேசியிருந்தா இன்னும் சந்தோஷமாயிருந்திருக்கும்..”

“நேரமில்லாமப் போயிடிச்சி மாமா.... அது மட்டுமில்லாம, எதைப் பேசப்போறோம்” என்று மேலும் எதையோ பேசமுற்பட்ட நேரத்தில் சேகரின் தந்தை ராமலிங்கமும், தாய் ராஜேஸ்வரியும் உள்ளே நுழைந்தனர்.

### தாய்மையின் சின்னம்

**கொ**த்தித் திரியுமந்தக் கோழி – அதைக் கூட்டி விளையாடு பாப்பா என்றார் பாரதியார். தன் குஞ்சுகளை அணைத்துப் பாதுகாத்து தாய்மையின் சின்னமாகத் திகழும் கோழி ஒன்றின் புகைப்படத்தை இங்கே காணலாம்.

- க. ரவீந்திரன்



நெடுநேரமாக வெளியே அமர்ந்திருந்து சேகரின் அறைக்குள் ஒவ்வொருவராகச் செல்லும் மலர்க்கொத்துகள் கொடுத்துப் பாராட்டுவதுமாக இருந்த கூட்டத்தைப் பார்த்து அவர்கள் நெகிழ்ந்து போயிருந்தார்கள். ஆனந்தக் கண்ணீர் படர்ந்திருந்த அவர்களது விழிகளில் கூடவே ஒரு சோகமும் இழைந்திருந்தது. மகனின் மணவாழ்க்கை நிம்மதியின்றிப் போனதும் இன்னும் சில தினங்களில் மணமுறிவு நிகழப்போவதும் அவர்களைப் பெரிதும் பாதித்திருந்தது.

என்றாலும் மகிழ்ச்சியான தருணங்களில் மனச் சோர்வை முகத்தில் காட்டிக்கொள்ளக்கூடாதென்பதில் அவர்கள் கவனமாயிருந்தார்கள். மகனோடு பெற்றோர்கள் தனியாகப் பேச ஏதாவதிருக்கும் என்று நாகரிகமாக நிர்மலாவும் அவளுடைய பெற்றோர்களும் விடைபெற்றுக் கொண்டனர். இடையிடையே வந்து போனவர்களின் வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்டான் சேகர்.

“சேகர்... உன்னோட எதிர்காலத்தைப் பத்தி என்னப்பா யோசனை பண்ணியிருக்கே..?”

இடையில் கிடைத்த ஒரு சிறு இடைவெளியில் சேகரின் தந்தை ராமலிங்கம் ஆதங்கத்தோடு கேட்டார்.

“யோசனையா.... அதைப்பத்தியெல்லாம் யோசிக்கலப்பா. நீங்களும் அதைப்பத்தியெல்லாம் யோசிச்சி கவலைப்பட வேண்டாம். நடக்கற மாதிரி எல்லாம் நடக்கட்டும்...”

“சேகர்... நம்ம கணபதிராமன் மக கஸ்தூரி எம்.எஸ்.ஸி

பயோகெமிஸ்ட்ரி படிச்சிருக்கா. பார்க்க லட்சணமா இருப்பா. நம்ம குடும்பத்துக்கு ஒத்துப் போகக்கூடிய இடம். கணபதி ராமனும் வசதிகள்ல எந்த வகையிலும் நமக்குக் குறைஞ்சவன் இல்ல..”

“யாருக்குப் பெண் பார்க்கறீங்க.. எனக்கா.. அதெல்லாம் ஒண்ணும் வேணாம்பா. எனக்குக் கவலைப்படவும் நேரம்கிடையாது. சந்தோஷப்படவும் அவகாசம் கிடையாது. எனக்கு என் தொழில், படிப்பு, வருமானம், தனிமை போதும். நான் என்னவோ இந்த டைவர்ஸால ரொம்ப அப்செட் ஆன மாதிரி நீங்கள்லாம் நினைச்சிட்டிருக்கீங்க. ஆனா எனக்கு இது ஒரு விடுதலை மாதிரி இருக்கு. ஒவ்வாமைன்னு சொல்றாங்களே.. அலர்ஜி. அது இருந்தா எதனாலே அதுவோ அதைத் தவிர்க்கறமாதிரி எங்க நிம்மதிக்காக நாங்க எங்களைத் தவிர்த்துக்கறோம். அவ்வளவுதான். மற்றபடி இந்த நிறுவனம், தொடர்பு எதுவும் அறுந்து போகாது.”

“இப்படி விட்டேத்தியா பேசினா எப்படிப்பா.. துணையில்லாம வாழ்ந்திட முடியுமா... ரெண்டு குடும்பத்துக்கும் வாரிசு வேணாமா.. சேகர் கூடுதல் குறைவு இருந்தாலும் அனுசரிச்சிப்போறதுதான் வாழ்க்கை. விட்டுக் கொடுத்தவங்க கெட்டுப்போறதில்ல..”

“இதை மிஸஸ் நிர்மலா கிட்டே சொல்லுங்க...”

“நாங்க உங்கிட்டே சொல்றமாதிரி அவுங்கப்பா அம்மா அவகிட்டே சொல்லாமலா இருப்பாங்க. விட்டுக் கொடுக்கறதுன்னா அடுத்தவங்க விட்டுக்கொடுக்கணும்னு அர்த்தமில்ல.. நாமதான் விட்டுக்கொடுக்கணும்”

“நான் தான் அவளை விட்டுட்டேனே.. அவளுக்கு வேற துணை வேணும்னா கூட நான் மனப்பூர்வமா ஒத்துக்க ரெடி....”

“நாங்க... என்ன சொன்னா.. நீ என்ன சொல்றே..”

ராமலிங்கத்திற்கு கோபம் உச்சத்திற்குப் போனது.. “இவன்கிட்டே யார் பேசுவா... வாடி..” மனைவியை இழுத்துக் கொண்டு விருட்டென்று வெளியேறினார் அவர்..

அவர்கள் வெளியே போனதும் ஒவ்வொருவராக நோயாளிகளை உள்ளே அனுப்பத் தொடங்கினார் உதவியாளர்.

ஐந்தாறு நோயாளிகள் வந்து போனபிறகு

தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி

அடுத்த நோயாளிக்காக பஸ்ஸரை அழுத்தியபோது உள்ளே நுழைகிறான் டாக்டர் ரோஹித்.

"ஹாய்.... நீயா... என்னடா, உனக்கு உடம்பு சரியில்லையா...?"

"உடம்பெல்லாம் சரியாத்தான் இருக்கு. மனசுதான் கொஞ்சம் அலம்பலா இருக்கு.... பை.த.வே... கங்கிராஜுலேஷன்ஸ்..."

என்று வாழ்த்தியவாறு பூச்செண்டு கொடுக்கிறான்.

"தாங்க்யூ.. மனசுக்கென்ன... மனசு கஷ்டமான நேரத்திலே மனசுக்கு நெருக்கமானவங்ககிட்டே ஷேர் பண்ணிக்கிட்டா மனம் அமைதியாயிடும். நான் நெருக்கம்னு நீ நினைச்சா, என்கிட்டே கூட ஷேர் பண்ணிக்கலாம்."

"உன்னோடதான் ஷேர்பண்ணிக்கணும். ஆனா அதை எப்படி உன்கிட்டே சொல்றதுன்னு தெரியல. உன்கிட்டே கேட்காம நான் முடிவெடுக்க முடியாது..."

"ரோஹித்... என்ன பெரிய பீடிகை போடறே.... நேரடியாவே விஷயத்துக்கு வா.... நாமெல்லாம் நீண்டநாள் நண்பர்கள், வார்த்தைகளைத் தேடித்தான் வேண்டியதை வெளிப்படுத்தணும்னு அவசியமில்ல.. கமான் டெல்மீ...."

"சேகர்.. டாக்டர் கிரிஜாவைப்பத்தி நீ என்ன நினைக்கிறே?"

"ஒரு அற்புதமான மனுஷி. அருமையான டாக்டர். கொஞ்சம் அழகும் கூட"

"அவுங்களை உனக்குப் பிடிக்குமா?"

"எனக்கு எல்லாரையும்தான் பிடிக்கும். அதே மாதிரி என்னையும் எல்லோருக்கும் பிடிக்கும், ஒரே ஒரு பெண்ணைத்தவிர. அது யாருன்னு உனக்கே தெரியும்... நம்ம ஃபிரண்ட் மேடம் நிர்மலா அவுங்களுக்கு இப்போ என்னைப் பிடிக்காது.."

"நீதான் அப்படி கற்பனை பண்ணிட்டிருக்கே. ஆனா அவுங்களுக்கும் உன்னைப் பிடிக்கும். யாருடைய திருஷ்டியோ தெரியலே.. மனசுக்கு ரொம்ப

கஷ்டமா இருக்கு. இன்னும் சில நாட்கள்ல டைவர்ஸ். இப்படியெல்லாம் நடக்கும்னு நான் நினைக்கவே இல்லைடா. நீங்க ரெண்டுபேரும் காதலிச்ச நாள்களைவிட கல்யாணம் பண்ணிக்கிட்டு வாழ்ந்த நாள்கள் ரொம்பக் குறைவு. காதல் திருமணம் குடும்பங்கள் கொஞ்சம் கூட எதிர்க்கலே. ஜாம் ஜாம்னு கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க. இவ்வளவு பெரிய நிறுவனத்தை பெரியவர்களோட ஆசியோட உருவாக்கிட்டீங்க. யாருடைய கண்திருஷ்டியோ என்னவோ... பிரியறீங்க... ஆனா நீங்க ரெண்டு பேரும் காலதாமதம் பண்ணாம வேற கல்யாணம் பண்ணிக்கணும்."

"எனக்கு நீ ஏதாவது பெண் பார்த்திருக்கிறியா..?"

"ஆமாம்.... டாக்டர் கிரிஜா... அவுங்களுக்கும் உன் மேல ஒரு சாஃப்ட் கார்னர் இருக்கற மாதிரி இருக்கு..."

"எனக்கு சரி.. நிர்மலாவுக்கும் ஒரு மாப்பிள்ளை பார்க்கணுமில்லையா..? அவுங்க மனசிலே யாராவது இருக்காங்களா... கண்டுபிடி.. சந்தோஷமா நடத்தி வைக்கலாம்..."

இப்படியொரு அதிர்ச்சியை ரோஹித் எதிர்பார்க்கவில்லை. குப்பென்று வியர்த்தது அவனுக்கு. முகத்திலும் சிறு கலவரம். அதற்குப்பிறகு பேச நா எழவில்லை. ரோஹித் வழிந்தான். இது சேகருக்கும் ஒரு சிறு அதிர்ச்சிதான் என்றாலும் அதைவிட அதிகமாக ஒரு கழிவிரக்கம், அவலமான உணர்ச்சி அவனுள் பரவியது.. காலத்தின் கோலம்.. உள்ளூரத் தன்னைப் பார்த்தே ஏளனமாகச் சிரித்துக் கொண்டான். என்னதான் விவாக முறிவுக்குக் காத்திருந்தாலும் தன் மனைவியையே பெண்கேட்க சுற்றிவளைத்து சொற்கள் தேடியும் கிடைக்காமல் தவிக்கும் தன் நண்பனைப் புரிந்து கொண்டான் சேகர். இன்னும் இடம் கொடுத்தால் நேரடியாகவே கேட்டுவிடுவான் போலிருந்தது. நல்ல வேளை சேகர் அனுமதிக்கவுமில்லை ரோஹித் மேலே போகவுமில்லை.

நிர்மலா யார்..! சேகரின் காதல்தேவதை. என்னதான் விவாகரத்து வழக்கு அவர்களை விலக்கி வைத்திருந்தாலும் அவனிடமே வந்து அவனுடைய மனைவியைப் பெண்கேட்க எண்ணுவது எத்துணை அசிங்கமானது!

நிர்மலா–சேகர் அவளுக்கு அவன்; அவனுக்கு அவள் என்று

இறைவன் செய்து கொடுத்ததுபோல் அத்துணை பொருத்தங்கள். சென்னை மருத்துவக்கல்லூரியில் சேகர். எம்.பி.பி.எஸ். நான்காம் ஆண்டு படித்தபோது நிர்மலா முதலாண்டு வந்து சேர்ந்தாள். அவர்கள் சந்திப்பதற்காகவும் சேர்வதற்கான வாய்ப்பாகவே அந்தப்படிப்பு அமைந்ததோ எனும் வண்ணம் அவன் படித்து முடிக்கும் வரை காத்திருந்து கைத்தலம் பற்றினான் சேகர்.

நிர்மலா முதலாண்டில் வந்து சேர்ந்த போது மாணவ மாணவிகள் செய்த ராகிங்கில் ஒரு காதல் காட்சியை சேகரோடு நடித்துக்காட்டவேண்டுமென்று படுத்தியதில் இருவருக்குமே வேர்த்து விறுவிறுத்துப் போய்விட்டது. சரியாகக் கூட நடிக்கத் தெரியாத நடிப்பென்றாலும் சில நாள்கள் அவளுடைய கனவில் இவனும் இவனுடைய கனவில் அவளுமாக தினம்தோறும் வந்து தொலைத்ததில் அவள் இடைமெலிந்ததும் இவனுடைய மதிப்பெண்கள் குறைந்ததும் நிகழ்ந்தது.

ஒருநாள் அவளைத் தனியாக சந்தித்து ‘சாரி சிஸ்டர்’ என்று சேகர் வழிந்தபோது, ‘பண்றதை யெல்லாம் பண்ணிப்புட்டு “சிஸ்டர்”ன்னு என்ன பம்மாத்து பேச்சு... சாரி நிர்மலா’ன்னே சொல்லுங்க’ என்றதும், அப்போதே காதலுக்குப் பச்சைக் கொடி காட்டப்பட்டதாகக் கனவில் மிதக்கத் தொடங்கினான் சேகர்.

எது நடந்ததோ, அதற்குப்பிறகு என்னவெல்லாம் நடந்தனவோ எல்லாமும் நல்லவையாகவே நடந்தன. இருவருடைய படிப்பு, செல்வம், தோற்றப்பொலிவு எல்லாமுமே இருவருடைய சாதிகளையும் புறந்தள்ளிச் சேர்த்துவைத்தன. பெரியவர்கள் சந்தித்தார்கள், சம்மதித்தார்கள். சம்பந்திகளாகிக்கொண்டார்கள்.

டாக்டர் நிர்மலா, டாக்டர் சேகர் ஆகியோர்தம் வாழ்க்கை மட்டுமல்ல, அவர்கள் கட்டிமுடித்த அந்த நிர்மலா நர்சிங்ஹோமும் வண்ணார் பேட்டையில் வளமாக விளங்கியது. ராசியான மருத்துவ மனை என்கிற பெயர் மட்டுமல்ல, அதிகமாய்ச் செலவு வைக்காத ஆஸ்பத்திரி என்பதாலும் எப்போதும் பொது மருத்துவமனைபோல் நோயாளிகளால் நிரம்பி வழியும். வட சென்னையே அவர்களை வாழ்த்திக் கொண்டிருந்தது.

இருவரும் பெசன்ட்நகரில் பெரிய மாளிகையைக் கட்டி முடித்திருந்தனர். வீட்டின் பால்கனியிலிருந்து பார்த்தால் கடல் தெரியும். அதிகாலை உதிக்கிற சூரியன் தெரியும், அஷ்டலட்சுமி கோவில் தெரியும். ஆனால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கவும், நம்பிக்கை வைக்கவும் மட்டும் தெரியாமல் போய்விட்டது.


யாருடைய கண் பட்டதோ இருவரும் பிரிய நேர்கிறது. வாழ்க்கையில்தான் பரஸ்பரம் இசைந்து பிரிகிறார்களே தவிர மருத்துவமனை நிர்வாகத்தில் எந்த மாறுதலும் இல்லை. இரண்டு குடும்பங்களுமே முரட்டுக் குடும்பங்கள். பகைத்துக்கொள்ள வழியில்லை. உட்கார்ந்து பேசி அவர்களை ஒன்றுசேர்க்க முயன்று தோற்றாலும் மருத்துவமனை, பார்மஸி, லாபரட்டரி, போன்ற அமைப்புகள் சிதறாமல் பார்த்துக்கொண்டனர்.


காதலித்த நாள்வரை கண்ணிலிருந்த கனவுகள் கல்யாணமானதும் கலையத் தொடங்கின. திருமணமாகி இரண்டொரு மாதங்களில் நிர்மலா கருவுற்றாள். தாயாகப் போகிற பெருமை அவளுக்கு இருந்ததைவிட அதிகமாய் தந்தையாகப் போகிறோம் என்ற கர்வம் சேகருக்கு இருந்தது. ஒரு குழந்தை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஒரு நாள் அதைக் கலைத்துவிட்டு நின்றாள் நிர்மலா.

தாய்மையைக் கொஞ்சம் தள்ளிப் போட நினைத்த நிர்மலா கருக்கலைப்பு செய்ய எண்ணியபோது முதலில் அதைச் சாதாரணமாகத்தான் எடுத்துக் கொண்டான் சேகர். ஆனால் அவள் கருக்கலைப்பு செய்து கொண்டபோது நர்ஸ் மோகனாவிடம் கொஞ்சம் சாம்பிள் எடுத்து வைக்கச் சொன்னது நிர்மலாவுக்குத் தெரிந்துவிட்டது. பூகம்பம் அன்றிலிருந்துதான் தொடங்கியது.

“ஏன் இந்த விஷப்பரிட்சை! அந்த சாம்பிளை டி.என்.ஏ. டெஸ்ட்டுக்கு அனுப்பப் போறீங்களா.. அந்தக் கருவுக்குத் தகப்பன் நீங்களா இல்லே வேற யாராவதான்னு பார்க்கணுமா..?

நீங்க இல்லேன்னா என்ன பண்ணுவீங்க? என்னை அடிப்பீங்களா... உதைப்பீங்களா! வீட்டைவிட்டு விரட்டுவீங்களா! அப்படியே இந்தப் பரிட்சையிலே நீங்கதான் தகப்பன்னா என்ன பண்ணுவீங்க. நிம்மதிப் பெருமூச்சு விடுவீங்களா? ஏன் நீங்க இப்படிக் கூட நினைக்கலாமே... அந்த தப்பை நான் கவனமா பண்ணியிருந்தா உங்களால என்ன பண்ணியிருக்க முடியும்?”






**பீ**கார் மாநிலத்தைச் சேர்ந்த ஓவியர் ரஜினி சின்ஹாவின் ஓவியங்களின் 32 கண்காட்சிகள் இந்தியா முழுவதும் நடந்துள்ளன. பட்டங்களைக் கருப் பொருளாகக் கொண்டு ஓவியம் தீட்டுவதில் இவர் ஆர்வம் காட்டுகிறார்.

**- க.ரவீந்திரன்**

சேகரால் எதுவும் பேசமுடியவில்லை. சிலையாக நின்று கொண்டிருந்தான். கோழி திருடிய கள்ளன் கையும் கோழியுமாகப் பிடிபட்டதைப் போல என்றும் அந்த நிலைமையைச் சொல்லலாம்... நிர்மலாவே தொடர்ந்தாள்.

"சந்தேகம்ன்னு வந்திட்டா இனிமே எடுத்ததுக்கெல்லாம் சந்தேகம்வரும். தனியா என்னை நோயாளிகளோட பார்ப்பீங்க. பெரிய மறுஷங்களோட பார்ப்பீங்க. நண்பர்களோட பார்ப்பீங்க. சந்தேகம் உங்க கண்ணை மறைக்கத் தொடங்கிட்டா அவுங்க ஒவ்வொருத்தரோடவும் என்னைக் கற்பனை பண்ணத் தொடங்கிடுவீங்க. வேண்டாம். உங்களோட எனக்கு இந்த வாழ்க்கை வேண்டாம். ரெண்டுபேரும் கௌரவமா பிரிஞ்சிடுவோம்"

பொரிந்து தள்ளிவிட்டு வெளியே போனது வரை நினைவில் வந்து உறுத்தியது. அந்த நினைவுகளை உதறிவிட்டு நிகழ்காலத்திற்கு வந்தான் சேகர். எதிரே டாக்டர் ரோஹித்.

“அயம் சாரி....உன்னை டிஸ்டர்ப் பண்ணிட்டேனா.. உனக்கு விருப்பம் இல்லேன்னா வேண்டாம்... வர்றேன்..”

என்று விடைபெற்றுக் கொண்டான் ரோஹித்.

## 10

சில நாள்களாகவே மிகுந்த சோர்வு சேகரின் முகத்தில் அப்பியிருந்தது. விவாகரத்துக்கான நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. அதற்குச் சில நாள்களே இருக்கும் ஒரு நாளில் அவன் தனியே தன்னுடைய கன்சல்டிங் அறையிலிருந்த தன் திருமணப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். டாக்டர் கிரிஜா உள்ளே வருகிறாள்..

“எக்ஸ்கியூஸ்மி.. நான் ஒன்றும் உங்களைத் தொந்திரவு பண்ணலியே”

“நோ.நோ... ப்ளீஸ். உட்காருங்க...”

“டாக்டர்.. சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க.. எந்தக் கஷ்டமான சூழ்நிலையிலும் பாறைமாதிரி உறுதியா இருப்பீங்க.. நீங்களே இப்படித் தளர்ந்திட்டா எப்படி...?”

“நோ.... நோ.. அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல.. அயம் ஆல்ரைட். அதிருக்கட்டும், ரெண்டு நாளா நீங்க என்னைப் பார்க்கலியே... ஒரு சின்ன ரெக்வஸ்ட். தினமும் என்கிட்டே ரெண்டு வார்த்தை பேசிட்டுப் போங்க.. உங்களுக்கு தர்மசங்கடம் இல்லேன்னா சாய்ங்காலம் உங்க கார்ல ஹாரிசன் கூட்டிட்டுப்போங்க. நல்ல நான்வெஜ் சாப்பிட்டு நாளாச்சு.. நாக்கு செத்துப்போய்க்கிடக்கு...”

“நீங்க உங்க வீட்டிலேர்ந்து வர்ற சாப்பாட்டை வேணாம்னு சொல்லிட்டீங்களாமே... நிர்மலாம்மா சொன்னாங்க.. ஏன் அப்படி...?”

“எத்தனை நாளைக்கு இந்த வீட்டுச் சாப்பாடு கிடைக்கும். டைவர்ஸ் வந்த பிறகு திடீர்னு நிறுத்தறதை விட கொஞ்சம் கொஞ்சமா நிறுத்திட்டா பெரிசா பாதிப்பு தெரியாதில்லையா..... அதுக்காகத்தான் நிறுத்திட்டேன்.

“எனக்கென்னமோ.. நீங்க ரெண்டு பேருமே உங்களை மாத்திக்கறது நல்லதுன்னு தோணுது. எனிஹவ் உங்களுக்குத் தெரியாத தில்லே.

பைதவே, மேடம் நிர்மலா 6 மணிக்கு ஒரு ஆபரேஷன் ஃபிக்ஸ் பண்ணியிருக்காங்க... இன்னிக்கு முடியாது..”

என்று சொல்லிவிட்டு விடைபெற்றுக் கொண்டது ஒருவகையில் நல்லதாகப் போயிற்று. இல்லையென்றால் இருவரும் சேர்ந்து போன செய்தி நிர்மலாவின் காது வரைபோகும் என்று தன்னைக்கட்டுப்படுத்திக் கொண்டான் சேகர். சில மணித்துளிகளில் தொலைபேசி மணி அடிக்கிறது...

“ஹலோ.. சேகர் ஹியர்...”

“சேகர், கும்மார்னிங்.... நான் சொன்ன விஷயத்தைப்பத்தி யோசிச்சியா...?”

“ரோஹித்... ஆர்யூ மேட்... உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு... இதப்பத்தி நீ... என்கிட்டே இனிமே பேசக்கூடாது ஓ.கே..”

கோபமாகத் தொலைபேசி இணைப்பைத் துண்டித்தான் சேகர். குழப்பமாக இருந்தது சேகருக்கு, தன்னுடைய திருமணத்தைப் பற்றி அவனுக்கென்ன இத்தனை அக்கறை.. ஒருவேளை கிரிஜாவோட தன்னைச் சேர்த்துவிட்டு, நிர்மலாவை மணக்க நினைக்கிறானா... அந்தஸ்தை பொறுத்தவரை யார் எங்களை எட்ட முடியும்..! ஒரு வேளை நிர்மலாவோடு பேசியிருப்பானோ... அவளுக்கு ரோஹித் மீது ஒரு எண்ணம் இருக்குமோ... இருக்காது. நிர்மலா அந்த அளவுக்கு இறங்கிவிடமாட்டாள். என்றாலும் தன்னிடம் பேசுவதை நிறுத்திவிட்டு நிர்மலாவிடம் பேசத் தொடங்கிவிட்டால் என்ற பயமும் சேகருக்கு இல்லாமலில்லை.

பெண்கள் அவசரப்பட்டு விவாகரத்து என்ற முடிவுக்கு வந்து விடுவார்கள். ஆனால் மணவாழ்வு முறிந்து தனித்துவிடப்படுகிறது போது வரும் மனக் குழப்பங்கள், சமூகம் அவர்களைப் பார்க்கிற பார்வை குறித்தெல்லாம் ஆழ்ந்து யோசித்தால் அவசரப்பட்டு அபத்தமான எந்த முடிவுக்கும் வராமல் அமைதியாகப் பல்லைக்கடித்துக் கொண்டிருப்பார்கள். அதுவுமின்றி நிர்மலா ஒரு சாதாரண பெண் அல்ல.... சாதனைப் பெண். இத்துணை பெரிய நிறுவனத்தை சாதாரண ஆசைகளுக்காக வேறு ஆடவனிடம் இழக்க மாட்டாள். அவளுடைய குடும்பமும் இதைக் கருதாது என்னும் ஆழ்ந்த நம்பிக்கை சேகருக்கு இருந்தது.

அந்தநாள் இந்தியப் பெண்கள் எதையும் தாங்கிக் கொண்டதால் தான் பூவோடும், பொட்டோடும், தாலிக்கொடியோடும் தலைநிமிர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்போதும் சேகரின் தந்தையும் தாயும் மட்டுமல்ல நிர்மலாவின் பெற்றோர்களும் அத்துணை அன்னியோன்யமாக இருக்கிறார்கள். எங்கே போனாலும் புருஷன் பெஞ்சாதியாகப் புறப்பட்டுவிடுகிறார்கள். நிர்மலாவும் சேகரும் அவ்வாறு சேர்ந்து செல்ல நினைத்தாலும் புறப்பட நேரமும் ஒத்துழைப்பதில்லை, மனமும் ஒரு புள்ளியில் சந்திப்பதில்லை. போதாக்குறைக்கு இப்போதெல்லாம் கிரிஜாவும் அடிக்கடி நினைவில் வந்து தொலைக்கிறாள். கிரிஜா... டாக்டர் கிரிஜா.. டெர்மடாலஜிஸ்ட். பிளாஸ்டிக் சர்ஜரியில் சிறப்புத் தகுதியுடன் மருத்துவராக வேலைக்குச் சேர்ந்திருக்கிறாள். வழக்கமான பணிகளோடு நின்றுவிடாமல் சேகருக்கு கொஞ்சம் ஆறுதலாகவும் இருக்கிறாள். இழந்த வசந்தம் இன்னொரு தேதியில் வந்தது போல் இவள் வடிவில் என்றுகூட சேகர் நினைத்திருக்கலாம். மெதுவாக அவளிடம் பேசிவிடலாமா... மௌனத்தை உடைத்து மனம் திறந்து கொட்டிவிடலாமா என்று துடித்தாலும் ஸ்டேட்டஸ் என்ற தடையும் பெரிய நிறுவனம் என்ற பொறுப்பும் சேகரை வேறு சிந்தனைகளுக்குள் வழுக்கிவிழச்செய்யவில்லை. ஒட்டிக் கொண்டிருக்கிற நிர்மலாவின் உறவு இப்படித் துண்டிக்கப்பட்டால் அவளும் தன்னைப்போல வேறு ஒரு துணையை... சேகரால் கற்பனை செய்யவே பயமாக இருந்தது.

## 11

**டா**க்டர் நிர்மலாவின் அறையில் கிரிஜா.. கிரிஜா, இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவே இல்லை.

“மிஸ் கிரிஜா.. சாரி டாக்டர் ‘கிரிஜா.. நான் இதைச் சொல்றதுக்காக ரொம்ப வருத்தப்படுகிறேன். தயக்கமாவும் இருக்கு. இருந்தாலும் வேற வழியில்லை. சொல்லித்தான் ஆகணும். இது ஒரு ஆஸ்பிட்டல். கோவில் மாதிரி. ஒரு பெரிய சமூக நிறுவனமா எங்க ரெண்டு குடும்பங்களும் சேர்ந்து இதை வளர்த்திருக்கோம். எல்லா ஆசிகளையும் தந்த கடவுள் எங்க ரெண்டு பேரோட மனசிலேயும் ஒரு பிடிப்பையும், பாசத்தையும் ஏற்படுத்தலே. பிரியப்போறோம். இன்னும் சில நாள்கள் தான் நாங்க கணவன் மனைவி. எங்க எதிர்காலத்தைப் பத்தி நாங்க இன்னும்

முடிவு செய்யல... ஆனாலும் ஒருத்தரை யொருத்தர் முடிவு எடுத்துக்க எங்க குடும்பங்கள் அவ்வளவு சுலபமா அனுமதிக்க மாட்டாங்க. நான் பேசறதைப் பார்த்த உனக்கு நான் என்னமோ ரொம்ப பொஸஸிவ்வா இருக்கற மாதிரி தெரியும். அது முழுசா உண்மையுமில்ல பொய்யுமில்லை. குடும்பங்கள் குழம்பியிருக்கும்போது நீங்களும் குழப்ப ஆசைப்படாதீங்க. சுத்திவளைக்காம சொல்றதாயிருந்தா நீயும் டாக்டர் சேகரும் பழகறது சரியில்ல. பசிக்கும்போது எதையாவது சாப்பிடணும்போல வாய் மசமசன்னுதான் இருக்கும். அதுக்காக நாம நம்ம பசிக்கு இரையாகிடக்கூடாது. வாழ்க்கை ஒருமுறைதான் வரும். அதைக் குழப்பமில்லாம அழகா தொடங்கிக்கோ. இது என்னோட அட்வைஸ் இல்ல.. ஆலோசனை. ஓகே..?"

என்று படபடவென்று பொரிந்து தள்ளிவிட்டு கிரிஜாவுடைய பதிலுக்கே காத்திராமல் எழுந்து வார்டுக்குப் புறப்பட்டுவிட்டாள் நிர்மலா...

## 12

எதிர்பார்த்த அந்த நாள் வந்தது. காலையில் அன்று குடும்பநல நீதிமன்றத்தில் முதல்வழக்கே சேகர் நிர்மலா மணமுறிவு வழக்குதான். இருவருமே நேர்த்தியாக உடுத்தியிருந்தார்கள். குறிப்பாக நிர்மலா... அவளுக்கு மட்டுமல்ல சேகருக்குமே மிகவும் பிடித்த அந்தக் கிளிப்பச்சை நிறப்பட்டு.... கூடுதலாக வழக்கமானதை விட அதிகமாய் நகைகள். நிர்மலாவின் அழகும் எழிலும் சேகரைக் கொஞ்சம் நிலைகுலையச் செய்திருந்தது. காலையிலிருந்தே இருவருக்கும் மனசு சரியில்லை என்றாலும் சேகரே அதிகமாய்ச் சோர்ந்து காணப்பட்டான். இருவரும் உள்ளே அழைக்கப்பட்டார்கள். நீதிபதியின் முன்னால் அமர்த்தப்பட்டார்கள். இருவரையும் ஏற இறங்கப் பார்த்து விட்டு அமைதியாகச் சில நிமிஷங்கள் வேண்டுமென்றே கழித்தார் நீதிபதி. அந்த நிமிடங்கள் எப்போதும் அர்த்தமுள்ள நிமிடங்களாக இருக்கும். சிலர் சோகம் தாளாமல் அழுதுவிடுவார்கள். சிலர் கோபத்தில் முகம் சிவந்து காணப்படுவார்கள். ஏதாவது நிகழ்கிறதா என்பதைப் பார்க்கவே அந்த நிமிடங்கள்....

"ஸோ..." என்று முரட்டுக்குரலில் அமைதியைத் துரத்திவிட்டு

இருவரையும் பார்த்து "யூ ஹேவ் டிசைடட்... பிரியறதுன்னு முடிவு பண்ணிட்டீங்க.. ஒரு வருஷம் எப்படி ரெண்டு பேரும் ஒண்ணா இருந்து பிரிஞ்சிருந்தீங்க...?"

என்று நீதிபதி கேட்டார். இருவரிடமிருந்து மௌனமே பதிலானது.

"இந்தக்கோர்ட் உங்களைப் பிரிக்கறதிலே ஆர்வம் காட்டல. ஆனா நீங்க தீர்க்கமா இருக்கறதாலே உங்க முடிவை ஏத்துக்கிறது. இந்தத் தீர்ப்பு கூட நீங்க தேர்ந்தெடுத்துக்கிட்ட தீர்ப்புத்தான். அதுக்கு நாங்க சாட்சி அவ்வளவுதான்.... இந்த சாட்சியத்தை சட்டம் தீர்ப்புன்னு சொல்லுது. அத நாங்க சட்டபூர்வமாக்கறோம். மணமுறிவுன்னாலும் நீங்க மனம் முறிஞ்சிடக்கூடாது. துணிச்சலா இருங்க, தெளிவா இருங்க. கடவுள் உங்களைப் பரிபூரணமா ஆசீர்வதிக்கட்டும்..."

என்று ஒரு அழகான பொழிவைப்போல அறிவுறுத்திவிட்டு சில பதிவேடுகளில் கையெழுத்து வாங்கிக் கொண்டு ஒரு நூலைப் பரிசளிக்கிறார். நீதிபதி ரூபன் ஜெயக்குமார், பாளையங்கோட்டைக்காரர். மூத்த நீதிபதி.



**49** வயதான ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஓவியர் யுரிகோ லோக்சன் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு டெல்லி தேசிய காலரி ஆப் மாடர்ன் ஆர்ட்டின் இயக்குநர் ராஜீவ் லோச்சனை மணந்து கொண்டு இந்தியாவில் வசித்து வருகிறார். சிறந்த ஓவியரான இவர் இந்திய தெய்வங்களின் உருவங்களை சிறப்பாக வரையும் ஆற்றல் உள்ளவர்.

**- க.ரவீந்திரன்**

நிறைய கூட்டங்களுக்குப் போகிறவர். மனம் தொடர்பாக நிறைய சிந்திக்கிறவர். அவருடைய அனுபவத்திரட்டான,

“ஆறுமனமே ஆறு” என்ற நூலில் ஒருபிரதியை அவர்களுக்கு அன்பளித்தார். அது அவரே வெளியிட்டநூல். நூலகம் வாங்கிக் கொள்ளவில்லை. அச்சிட்ட ஆயிரம் புத்தகங்களையும் கோர்ட்டில் வைத்துக் கொண்டு நண்பர்களுக்கும், பிரிகிற தம்பதிகளுக்கும் பரிசாக வழங்கிக் கொண்டிருக்கிறார். “இதை நான் உங்களுக்கு தண்டனையா தருவேன்னு” ஜோக்கும் அடிப்பார்.

விவாகரத்து அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது. எதையோ இழந்தது போலிருந்தது சேகருக்கும் நிர்மலாவுக்கும். உயிரே அற்றுப்போனது போலவும், உடலே தளர்ந்தது போலவும் பலவீனமாக உணர்ந்தார்கள். அவர்களுடைய பெற்றோர்களின் கண்களும் கலங்கியிருந்தன. என்றாலும் பகையறியாமல் நிர்மலாவின் பக்கத்தில் சேகரின் தாய்–தந்தையரும் சேகரின் பக்கத்தில் நிர்மலாவின் பெற்றோர்களும் ஆறுதலாக நின்று கொண்டனர். சேகரும், நிர்மலாவும் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளாமலேயே வந்திருந்த நெருக்கமான ஒருசில நண்பர்களிடம் விடைபெற்றுக்கொண்டனர். தனித்தனியே காரில் புறப்பட்டனர்.

## 13

ஒவ்வொரு நாளும் கழிவதற்குப் பலமணி நேரம் எடுத்துக் கொள்வது போலிருந்தது. என்றோ விடிந்து என்றோ முடிவதுபோல் அத்துணை நீளமான பொழுதாக நாளெல்லாம் அவர்களுக்குக் கழிகிறது. டாக்டர் சேகர் புதிதாக “அதைப்” பழகிக்கொண்டான். ஒருநாள் அதைத் தொடங்கியது ஒவ்வொரு நாளுமாகத் தொடர்ந்தது. ஒருநாள் மருத்துவ மனையில் உள்ள தன்னுடைய அறைக்குத் திரும்பியபோது தள்ளாடியதைப் பார்த்த செக்யூரிடி வேலாயுதம், சபாநாயகத்திடம் போட்டுக் கொடுத்துவிட்டார்.

தன் மகளிடமிருந்து மணமுறிவு பெற்றுக் கொண்டாலும், மாப்பிள்ளை என்றுதான் சேகரை அவர் மனம் நிறைய அழைக்கிறார். ஒருநாள் டாக்டர் சேகரை அவருடைய அறையில் சந்தித்து,

"மாப்பிள்ளை மனசு சரியில்ல, நிம்மதி வேணும்ன்னா படிக்கலாம் நல்ல மியூசிக் கேட்கலாம், தியானம் பண்ணலாம், நண்பர்களோட வெளியே போகலாம். தேர்ந்த சினிமாக்கள் பார்க்கலாம். ஆனா இது மட்டும் வேணாம் மாப்பிள்ளை. இப்பல்லாம் சமூகம் ஒருத்தரோட பலத்தை பயன்படுத்தறதை விட பலவீனத்தைப் பயன்படுத்திக்கிறது. இதுதான் உங்க பலவீனம்னா உங்களை வீழ்த்த இதுவே நம்ம போட்டியாளர்களுக்கு உதவியா போயிடும்."

"சாரி மாமா.. பெரியவங்க கலந்துக்கிட்ட பார்ட்டி ஜஸ்ட் ஃபார் எ,கம்பெனி சேக்.... அதிகமாக்கூட இல்ல.... ஒரு ஸ்மால்தான்."

"தப்புங்கிறது கொஞ்சமா இருந்தாலும், கூடுதலா இருந்தாலும் தப்புதான். சாரி மாப்பிள்ளை. உங்களுக்கு அட்வைஸ் பண்ண எனக்கு என்ன தகுதியிருக்குன்னு நினைச்சிடாதீங்க.. ப்ளீஸ்..."

"நிறைய தகுதி இருக்கு மாமா.. நிர்மலா என்னை விட்டுப் பிரிஞ் சிட்டாக்கூட நீங்க தான் என் மாமா."

"தாங்க்யூ மாப்ளே... எனக்கு நீங்க ஒரு ப்ராமிஸ் பண்ணுவீங்களா..? இனிமே இது கூடாது. இதெல்லாம் இங்கே யாருக்கும், இல்லாம இருந்தாதான் இந்த ஹாஸ்பிட்டல்ல 'டி அடிக்ஷன் டிபார்ட்மென்ட்' வச்சி, போதை அடிமைகளைக் குணப்படுத்தற தகுதி நமக்கு உண்டு. நாமே குடிக்கிறவங்களா இருந்து இதை எப்படி நடத்த முடியும்?"

"ஆமா மாமா. நீங்க சொல்றது ரொம்ப கரெக்ட். இனிமே என்னை நீங்க இப்படிப் பார்க்க முடியாது..."

என்று அவருடைய கையைப் பற்றிக் கொண்டு உணர்ச்சிவயப்பட்டு நின்றான் சேகர். மதுவின் நெடி அவனிடமிருந்து வீசினாலும், இனிமேல் குடிக்க மாட்டேனென்று சொன்னது இன்னும் அவன் தன்னை மதிப்பதை உணர்த்தியதில் அவருக்கு மகிழ்ச்சி. அவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்ட சபாநாயகம், நேரே தன் மகள் நிர்மலாவின் அறைக்குப் போகிறார்.

அந்தப்பின்னிரவிலும் அவள் மருத்துவ மனைக் கணக்குகளைப் பார்த்துக் கொண்டும், காசோலைகளில் கையெழுத்து போட்டுக் கொண்டும் கவலையின்றிக் காணப்பட்டாள். இந்த 'டைவர்ஸ்'

மாப்பிள்ளையைத்தான் பெரிதும் பாதித்திருக்கிறதே தவிர மகளைக் கொஞ்சமும் பாதித்ததாக, அவருக்குத் தெரியவில்லை. எந்த விதமான சலனமும், பாதிப்புமில்லாமல் தன் பணிகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள் அவள் தந்தை வருவதைப் பார்த்து வரவேற்கிறாள்.

"வாங்கப்பா...."

"வீட்டுக்குக் கிளம்பலியாம்மா. நேரமாகுதே..."

"வீட்டுக்குப்போய் என்ன பண்ணப்போறேன்... இந்த பேமென்ட்ஸ் எல்லாம் ரொம்ப நாளா பெண்டிங். போன் பண்ணிட்டிருக்காங்க. அதான் அனுப்பறதுக்காகப் பார்த்திட்டிருக்கேன்..."

அவரோடு பேசிக் கொண்டிருக்கும் போது தொலைபேசி மணி அடிக்கிறது. நிர்மலா எடுக்கிறாள்.

"ஹலோ... நிர்மலாசேகர் ஹியர்' என்று பதிலிறுத்துவிட்டுப் பேசுகிறாள் – வேறு யாரோ ஒரு மருத்துவர் போலிருக்கிறது. குறிப்பிட்ட ஒரு நோய் குறித்தும் பேசத் தொடங்கிவிட்டாள்.

சபாநாயகத்துக்குப் பெருமையாக இருந்தது. டைவர்ஸ் ஆன பிறகு கூட தன் கணவனுடைய பெயரைச் சேர்த்துக் கொண்டு சொல்வதில் அவர் மகிழ்ந்தார். நிர்மலா சேகர் என்பதுதான் அழகாக இருக்கிறது என்று மனதுக்குள் நிறைவடைந்தார்... போனில் பேசி முடித்ததும் தந்தையிடம் பேசத் தொடங்கினாள்.

"அப்பா... போன்ல யாரு தெரியுமா.... டாக்டர் சேகர்தான்... உங்க பழய மாப்பிள்ளை"

"மாப்பிள்ளைன்னு சொல்லும்மா... அதென்ன பழைய மாப்பிள்ளை?"

"அவரு பழைய மாப்பிள்ளை கூட இல்லப்பா... புது மாப்பிள்ளை. புதுசா சில பழக்கங்களைக் கத்துட்டிருக்கார். ரொம்பப் பேசறார். கொஞ்சம் சாப்பிட்டிருப்பார் போல இருக்கு. ரூமிலேயே இருக்கார். நாளைக்கு ஏதோ ஆபரேஷன் பண்ணப்போறாராம். சில சந்தேகங்கள் மெடிகேஷன் பத்தி டிஸ்கஸ் பண்ணினார்."

"நீங்க ரெண்டுபேரும் வேற எதையும் டிஸ்கஸ் பண்ண மாட்டீங்களா? குடும்பம், எதிர்காலம்... இதைப் பத்தி...?"

“அதெல்லாம் தான் முடிஞ்சிப் போச்சேப்பா”

“அப்படியெல்லாம் சொல்லாதேம்மா... மாப்பிள்ளை ரொம்ப அப்செட்டா இருக்கார். அவரை இந்த டைவர்ஸ் ரொம்பப் பாதிச்சிருக்கு...”

“என்னையும் தான் பாதிச்சிருக்கு. அதுக்காக நம்ம பொறுப்புகள்லேர்ந்து விலகிக்க முடியுமா... எதிர்காலம்கிறது குடும்பம் மட்டுமில்லை, நாம வாழற வாழ்க்கையும் பயனுமே எதிர்காலம்தான்..”

“என்னமோம்மா.. உங்க ரெண்டு பேருக்கும் எதிலேயும் கொஞ்சம் அவசரம், வேகம், சரி, நடந்தது நடந்து போச்சு.... ஆனா எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கு. ‘காலம்’ங்கிற களிம்பு எந்தக் காயத்தையும் ஆறவச்சிடும். பார்ப்போம்...”

என்று பெருமூச்செறிந்துவிட்டு விடைபெற்றார் சபாநாயகம். நிர்மலா மீண்டும் தன் பணிகளில் ஈடுபடலானாள்.

## 14

இது அதிர்ச்சிதான் என்றாலும் ஆனந்த அதிர்ச்சி. ரோஹித் இப்படி திடுமென்று திருமண அழைப்பிதழோடு வருவானென்று சேகர் எதிர்பார்க்கவேயில்லை. அதிர்ச்சி என்பதும் ஆனந்த அதிர்ச்சி என்பதும் சேகருக்கு திருமண அழைப்பிதழ் கொடுத்தது மட்டுமல்ல, மணமகள் டாக்டர் கிரிஜா என்பதுதான்.

“என்ன ரோஹித்.... திடீர்னு ஒரு திருப்பம்... காதல் திருமணமா...?”

“அப்படிக்கூட வச்சிக்கலாம்.. ஆனா எங்க பேரண்ட்ஸ் முடிவு பண்ணினது. அஃப்கோர்ஸ் இன்டர்காஸ்ட் மேரேஜ்..”

“அதான் தெரியுமே... நம்ம மாதிரி படிச்சவங்களும், பணக்காரங்களும் பண்ணிக்கிட்டா... கலப்புக்கல்யாணம்.. ஏழை எளியவங்க பண்ணிக்கிட்டா... கைகலப்பு... கலாட்டா..”

“இந்தக் கல்யாணத்தில் உங்கப்பா அம்மாவும் நிர்மலாவோட அம்மா அப்பாவும் அதிகமா இன்ட்ரஸ்ட் எடுத்துக்கிட்டாங்க. அவுங்கதான் இதை எங்க பேரண்ட்ஸ்கிட்டே பேசி முடிவு பண்ணியிருக்காங்க”

"இல்லே... என்னென்னமோ நடந்திட்டிருக்கு. எதுவும் என் காதுக்கு வரமாட்டேங்கிது. இந்த ஆஸ்பத்திரியில மருத்துவம் மட்டும்தான் நடக்குதுன்னு நினைச்சா கண்ணும் கண்ணும் வச்சமாதிரி காதலும் நடந்திட்டிருந்திருக்கே!"

"அவசியம்... நீ கல்யாணத்துக்கு வரணும்.. நிர்மலாவும் வர்றேன்னு சொல்லியிருக்காங்க.. நீங்க ரெண்டுபேரும் தம்பதி சமேதரா நின்று வாழ்த்தணும்."

"தம்பதி சமேதராவா... எங்களை நடிக்கச் சொல்றியா...?" ஹீரோயின் ஓகேன்னா.. இந்த ஹீரோவும் ஓகேதான்."

"அதெல்லாம் அவங்களுக்கு ஓகேதான். நீ ஓகேன்னா ஓகேதான்"

என்று மகிழ்ச்சியோடு விடைபெற்றுக் கொண்டான் ரோஹித். சற்று நேரத்தில் இன்டர்காம் ஒலித்தது.. நிர்மலா பேசினாள்...

"ஹாய் நிர்மலா.... நல்லா இருக்கியா..?"

"இருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க. ஒழுங்கா நேரத்துக்கு சாப்பிடு நீங்களா.. புதுசா ஒரு ஆயா... சமைக்கிறாங்க. நல்லா இருக்கு. நான் வெஜ் பிரமாதமா பண்றாங்க. அனுப்பிவைக்கட்டுமா?"

"இப்பல்லாம் எனக்கு நான் வெஜ் பிடிக்கறதில்ல. சம்டைம்ஸ் ஜீரணம் ஆக மாட்டேங்கிறது."

"அதுக்கு நல்லா குடிக்கணும். ஊரைச் சுத்தணும்."

"குடிக்கிறேனா..?"

"ஆமா.. அப்பா.. எல்லாத்தையும் சொன்னார். அவருக்கு உங்க மேல ஒரு மதிப்பும், மரியாதையும், அன்பும் இருக்கு. அதைக் கெடுத்துக்காதீங்க. அதைவிட மேலா உடம்பைக் கெடுத்துக்காதீங்க. எதுக்கும் கவலைப்படாம இருங்க. கொஞ்ச நாள் ஆனதும். உங்களுக்குன்னு ஒருத்தி வருவா. பைதபை அடுத்தவாரம் போர்டு மீட்டிங். எல்லா டைரக்டர்ஸும் கண்டிப்பா வரணும். சில முக்கியமான முடிவுகள் எடுக்க வேண்டியிருக்கு. நீங்கதான் எம்.டி. ஞாபகம் இருக்கில்ல..."

"அதெல்லாம் அப்பப்ப நீங்க சொல்லும் போதுதான் தெரியுது.

தலையாட்டவும் கையெழுத்து போடவும்தானே நான்!"

"டோன்ட் பி. சில்லி. அந்தந்த வேலைகள் அதுவா நடக்கற மாதிரி ஒரு சிஸ்ட்டம் ஸ்ட்ரீம்லைன் ஆயிடுச்சி. ஒவ்வொருத்தரும் ஒழுங்கா கையெழுத்து போட்டுட்டு 'கம்'முன்னு இருந்தாலே போதும்"

"அதிருக்கட்டும் ரோஹித் கிரிஜா கல்யாண லட்டர் வந்ததா...?"

"வந்தது.... உங்களுக்குக் கொஞ்சம் அதிர்ச்சியா இருந்திருக்குமே.... கிரிஜாவுக்குக் கல்யாணம்ங்கிறது உங்களை அப்செட் பண்ணியிருக்குமே!"

"இப்படி நீ குதர்க்கமா பேசும்போதுதான் நீ கிரிஜாகிட்டே நடந்துக்கிட்டதும், பேசினதும் உறுதியாகுது, கிரிஜாகிட்டே நீகொஞ்சம் முரட்டுத்தனமா நடந்துக்கிட்டியாமே..."

"நடந்துக்காம.. அவளைக் கொஞ்சவா முடியும்... நான் அவளைக் கண்டிச்சதால தான் அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைச்சிருக்கு. இல்லேன்னா.. ஏமாந்தவங்களாலே.... ஏமாத்தப்பட்டிருப்பா..." என்று தொலைபேசி தொடர்பைத் துண்டித்துக் கொண்டாள் நிர்மலா... அதுவரை அமைதியாக எதிரே சோபாவில் அமர்ந்திருந்த தந்தையை தொலைபேசியை வைத்த பிறகுதான் பார்க்கிறான் சேகர்.

"சாரிப்பா... நீங்க வந்ததைப் பார்க்கலே....."

"பரவாயில்ல.. நீ முக்கியமா.. யார்கிட்டேயோ பேசிட்டிருந்தே. நான்கூட இப்பத்தான் உள்ளே நுழையறேன்" என்று சமாளித்தார்.

"டாக்டர் ரோஹித் வந்திட்டுப்போனார். கல்யாண லட்டர் கொடுத்திட்டுப்போனார். எல்லாம் உங்க ஏற்பாடுதான் போல இருக்கு.."

"ஆமாப்பா. கல்யாணத்தை நாமதான் முன்னால இருந்து நடத்தணும்.. ரெண்டு குடும்பமும் சாதாரண குடும்பம். வசதிகளும் பெரிசா கிடையாது. நல்ல பிள்ளைகள். சாப்பாட்டு செலவுகளை நம்ம சம்பந்தி ஏத்துக்கறார். நான் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் ஆளுக்கு ஒரு லட்சம் மொய்ப்பணம் தரலாம்னு நினைச்சிட்டிருக்கேன்.."

"நீங்க சொன்னா சரிதான்ப்பா..."

தந்தையின் பேச்சுக்கு மறுப்பு சொல்லாமல் இசைந்தான் சேகர்.

ஆனால் அவனுக்கு இன்னமும் அந்த புதிருக்கான விடை மட்டும்தான் புரியவில்லை. நிர்மலாவைக் கேட்டுக்கொண்டிருந்தவனுக்கும், தன்னிடம் குழைந்தவளுக்கும் எப்படி இது 'ஒர்க் அவுட்' ஆனதென்பதில் ஏகப்பட்ட குழப்பம் என்றாலும் தொல்லை விட்டது என்பதில் ஒரு திருப்தி.

## 15

குறித்தநாளில் ஒரு சுபயோக தினத்தில் சென்னை காளிகாம்பாள் கோவிலில் மிக எளிமையாகத் திருமணம் நடந்தது. மருத்துவமனை ஊழியர்கள் மட்டுமல்ல ரோஹித்–கிரிஜா உறவினர்கள் நண்பர்கள் திரண்டதில் வழக்கமான வெள்ளிக்கிழமை கூட்டத்தோடு திருமணக் கூட்டமும் சேர்ந்து தம்புச் செட்டித் தெருவே திணறியது.

தங்கள் வீட்டுத் திருமணத்தைப் போல சேகர் – நிர்மலா வீட்டைச் சேர்ந்தவர்கள் அத்துணை ஈடுபாட்டுடன் நடத்தினர் – சேகரும் நிர்மலாவும் தங்களுக்குள் எதுவுமே நிகழாதது போல அத்துணை மகிழ்ச்சியோடும், சிரத்தையோடும் திருமணக்காரியங்களை நின்று கவனித்துக் கொண்டதில் ரோஹித்–கிரிஜா தம்பதியர்க்கும், பெரியவர்களுக்கும் சொல்ல வொண்ணா மகிழ்ச்சி.

இந்தத் தம்பதிகள் பிரிந்துதான் இருக்க வேண்டுமா. காளிகாம்பாள் இவர்களைச் சேர்ந்து வாழச்செய்திருக்கக்கூடாதா என்று எல்லா நல்ல உள்ளங்களும் ஏங்கியதோடு அவர்களுக்காக வேண்டியும் கொண்டன. நிர்மலாவின் கழுத்தில் சேகர் கட்டிய தாலி அப்படியே இருக்கிறது. மஞ்சள் நிறப் பட்டுச் சேலை கிளிப்பச்சை ரவிக்கை. கழுத்து நிறைய நகைகள், தலைநிறைய பூ. இதழ் நிறையச் சிரிப்பு என்று மங்கலமாக அவளும், பட்டு வேஷ்டி பட்டுச்சட்டை, ஏழெட்டுபவுன் தேறும் பிராஸ்லெட், கழுத்தில் இன்னும் கனமான செயின் பார்க்க அத்துணை வசீகரமாய் லட்சுமிகரமாய் இருவரும் தோன்ற அவர்களிடம் புதுமணத் தம்பதியர் காலில் விழுந்து ஆசிகள் பெற்றுக் கொண்டனர்.

அன்று மாலையே நிர்மலா சேகரின் பெசன்ட்நகர் வீட்டிலிருந்து சென்னைப் பிரபலங்க ளெல்லாம் வந்து குவிந்திருந்தனர். நிர்மலாவின் ஏற்பாடு, விழா நேர்த்தி குறித்து விருந்தினர்களும் நண்பர்களும்

பிரபல நகை நிறுவனம் ஒன்று தனது 175 ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி RUBEDO என்ற புது உலோகத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. லத்தீன் மொழியில் இதற்கு 'சிகப்பு' என்று பொருள். தங்கத்தை விட விலை குறைவான இது தங்கம், வெள்ளி, தாமிரம் கலந்த கலவை. 200 டாலரிலிருந்து 7500 டாலர் விலை வரை இந்த வகை நகைகள் விற்பனைக்கு கிடைக்கின்றனவாம்.

- க.ரவீந்திரன்



வியந்திருந்தனர். அவளைப் புகழாதவர் எவருமில்லை.

"எப்படித்தான் இவளால் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்ள முடிகிறதோ... எதுவுமே நடக்காதது போல் கலகலப்பாக இருக்கிறாளே! விவாகரத்து ஆனவள் மாதிரியா இருக்கிறது. நான்தான் கிடந்து தவிக்கிறேன். எதிர்காலம் சூனியமாகிவிட்டதோ என்று கரைகிறேன். இவள் கல்லுளிமங்கி மாதிரி நடந்து



கொள்கிறாளே" என்று தன் அம்மாவிடம் புலம்பித்தீர்த்தான் சேகர். அவளுக்கும்கூட இது புரியாத புதிராகத்தான் இருந்தது... என்றாலும்,

"படிச்ச பொண்ணுடா... நாகரிகமா நடந்துக்கறா.... உன்னை மாதிரி அழுதுவடியச் சொல்றியா?"

என்று மகனை லேசாகக் கடிந்து கொள்ளத் தவறவில்லை அவள். விருந்து முடிந்தது. ஒவ்வொருவரும் விடைபெறுகிற நேரம். மெல்லமெல்ல வீடு வெறிச்சோடுகிறது. ரோஹித்தும் கிரிஜாவும் சேகரை மட்டும் தனியாக பால்கனிக்கு அழைத்துப்போய் நன்றி கூறினார்கள். நிர்மலா ஒவ்வொருவரையும் வழியனுப்பிக் கொண்டிருந்தாள்.

"சேகர்... உனக்கும் நிர்மலாவுக்கும் எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலே" என்று நெகிழ்ந்த ரோஹித்திடம்...

"இதுக்கெல்லாம் எதுக்குடா நன்றி.. நாமெல்லாம் நண்பர்கள். இதெல்லாம் எங்க கடமை..." என்றான் சேகர்.

"சேகர் கொஞ்சநாளா என்மனசை அரிச்சிட்டிருக்கற ஒரு விஷயத்தை உன்கிட்டே சொல்லணும்...."

"என்ன ரோஹித்?"

"நான் உங்க கிட்டே வந்து மறைமுகமா நிர்மலாவைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறதா பேசினதெல்லாம் சும்மா ஒரு விளையாட்டுக்கு. நிர்மலா என் சிஸ்டர் மாதிரி. உன் மனசிலே என்ன இருக்கு.. நிஜமாவே இந்த டைவர்ஸ் உன்னைப் பாதிச்சிருக்குதா.. இன்னமும் நீ பொஸஸிவ்வா இருக்கிறியான்னு தெரிஞ்சிக்க நானும் கிரிஜாவும் நடத்தின ஒரு சின்ன நாடகம்... அவ்வளவுதான்."

"அவுங்க யாருக்கும் சொந்தமாகக் கூடாதுங்கிற மாதிரி நீங்களும் வேறயாரையும் விரும்பிடக் கூடாதுங்கறதுக்காகத்தான் நானும் உங்களைக் கொஞ்சம் டெஸ்ட் பண்ணிப்பார்த்தேன். நீங்க ஜென்டில்மேன். எங்க ரெண்டு பேரையுமே நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாது..." என்ற கிரிஜாவிடம்,

"நோ நோ.... அதையெல்லாம் ரசிக்கிற மாதிரியோ, கோபப் படறமாதிரியோ என் நிலைமை இல்லை" என்று பதிலிறுத்தான் சேகர்.

“சேகர் நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே... நீயும் நிர்மலாவும் உடலாலேதான் பிரிஞ்சிருக்கீங்க... மனசு என்னவோ சேர்ந்துதான் வாழ்ந்திட்டிருக்கு. சட்டப்படி விவாகரத்து வாங்கிக்கிட்ட பிறகுகூட கணவன் வேற ஒருத்திக்கு உடமையாகக் கூடாதுன்னு நினைக்கிற நிர்மலாவும் சரி, தன்னோட முன்னாள் மனைவி வேற யாருக்கும் உரிமையாகக் கூடாதுன்னு நினைக்கிற உனக்கும் சரி... விவாகரத்து எதுக்கு..? நீங்க ஊரை மாத்திரம் இல்ல, உங்களையும் ஏமாத்திட்டிருக்கீங்க. ரெண்டுபேரும் ஒருநாள் உட்கார்ந்து பேசுங்க...”

“பார்க்கலாம்” என்று ஒரு பேச்சுக்கு பதிலிறுத்தாலும் சேகர் கொஞ்சம் கரைந்துதான் போயிருந்தான். விருந்துக்கு வந்த நண்பர்களும், உறவினர்களும், மருத்துவ மனை ஊழியர்களும் புறப்பட்டு விட்டனர். சேகர், நிர்மலா ஆகியோரின் பெற்றோர்களும் கூடவே சில நெருங்கிய உறவினர்கள் மட்டுமே எஞ்சினர். சேகரும் விடைபெறத் தயாராகி எழுந்தான்.

“சேகர்...” என்ற குரல் கேட்டுத் திரும்பினான். நிர்மலா நின்று கொண்டிருந்தாள்.

“சேகர்.. நீங்க இங்கே தங்கி ரொம்ப நாளையிடுச்சி. மாடியிலே உங்களுக்கு ஒரு ரூம் இருக்கு.. இன்னிக்கு மட்டுமாவது தங்கிட்டுப் போகலாமே....”

கல்லும் இப்படிக் கரைந்துருகுமா.. என்று அவன் நினைத்தாலும் “சாரி நிர்மலா.. நான் இங்கே தங்கமுடியாது” என்றான். ஆணல்லவா. அந்தச் செருக்கு அவனிடம் சற்று, அதிகமாகவே ஒற்றிக் கொண்டிருந்தது. நிர்மலா கட்டாயப் படுத்தவில்லை. அவளும் திமிரில் அவனைக் காட்டிலும் எந்த வகையிலும் குறைந்தவளில்லை. அதற்குப் பிறகும் அவள் அவனை வற்புறுத்தவில்லை.

தொடர்ந்து ஏதாவது பேசுவாள் என்று அவன் எதிர்பார்த்து ஏமாந்ததுதான் மிச்சம். நிர்மலா அப்படியே விட்டுவிட்டாள்... நீண்ட அமைதி.

சபாநாயகம் தான் அந்த மௌனப் பனி உறைவை உடைத்தார்.

“மாப்ளே..! அம்மா நிர்மலா....! சம்பந்தி..! எல்லோரும் கொஞ்சம் என்பக்கம் திரும்புங்க. எல்லாரும் நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க.. ப்ளீஸ்... லிஸின் டு மீ....”

அவருடைய குரல் சற்று உடைந்திருந்தது. கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டும் காணப்பட்டார். எல்லோரும் அவர் பக்கம் திரும்பினார்கள்.

“சாரி... நான் இதைச் சொல்றதுக்கு ரொம்ப வெட்கப்படறேன்.. வேதனையும் படறேன். நாம எல்லாருமே ஒரு மௌன நாடகத்தை நடத்திட்டிருக்கோம். போலித்தனமா நம்ம மனசாட்சிக்கு மாறுபட்டு காரியங்கள் நடத்திட்டிருக்கோம். இது இந்தக் குடும்பம் மட்டுமில்ல, நம்ம பண்பாடும், கலாச்சாரமும் கேள்விப்பட்டிராத, ஒவ்வாத ஒத்துக்க முடியாத விஷயம். பெரியவங்க கொஞ்சம் பெருந்தன்மையா நடந்துக்கறதும் கூடுதலா நம்ம சந்ததிகளுக்கு சுதந்திரம் கொடுத்ததும் இதுக்கெல்லாம் நாம அங்கீகாரம் கொடுத்த மாதிரி ஆயிடுச்சி. ஆனா பெத்த மனசு உள்ளூர அழறது யாருக்குத் தெரியும்..! ஸோ நான் ஒரு முடிவு எடுத்திருக்கேன். இது நம்ம குடும்பத்துக்கான முடிவு மட்டுமில்ல. நம்ம நிறுவனத்துக்குமான முடிவு. நிர்மலாவும் சேகரும் பண்ணிக் கிட்டது காதல் கல்யாணம் இருந்தாலும் பெரியவங்க பேசி முடிச்சி மனப்பூர்வமா நடத்திவச்சோம். சாதிவிட்டு சாதிக் கல்யாணம். ஆனா ஸ்டேட்டஸிலே பெரிய வித்தியாசம் இல்லாததால ரெண்டு குடும்பமும் சுலபமா சேர்ந்தது. எப்படி இயல்பா எல்லாம் நடந்ததோ அப்படியே இயல்பா டைவர்ஸும் நடந்திடுச்சி. சேர்ந்ததும் அவுங்க, பிரிஞ்சதும் அவுங்க. ஆனா ரெண்டுபேருக்கும் அந்த பொஸஸிவ்னெஸ் மட்டும் இன்னும் போகல. நிர்மலா வேற ஒருத்தருக்கு மனைவியாகறது சேகருக்குப் பிடிக்கலே. சேகர் இன்னொருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கிறது நிர்மலாவுக்குப் பிடிக்கல... மனத்தளவிலே இன்னமும் கணவன் மனைவி ஸ்தானத்தை விட்டுக்கொடுக்க ரெண்டுபேருக்கும் சம்மதமில்ல. எப்பவும் போல இயல்பாத்தான் இருக்காங்க. மனப்பூர்வமா சம்மதிச்சிப் பிரியும்போது மனப்பூர்வமா சம்மதிச்சி ஏன் ஒண்ணா சேரக்கூடாது? ரெண்டு பேருக்குமே ஒருத்தரை யொருத்தர் விட்டுக் கொடுக்க மனமில்லாத உறவுதான் நெஜம்... டைவர்ஸ்ங்கிறது பொய்...

ஒரு வாதத்துக்காக அவுங்க பிரியணும்ங்கிறது இந்த விவாகரத்தோட எதிர்பார்ப்பா இருந்தா... இந்தக் குடும்பங்கள் கூட பிரிவு வரணும். நாம கட்டிவச்சிருக்கிற இந்த நிறுவனத்தையும் அவுங்கவுங்க பங்குக்குப் பிரிச்சிக்கணும். பேசாம எல்லாத்தையும் வித்துப்புட்டு அவுங்கவுங்க விகிதாச்சாரப்படி பிரிச்சிக்கிட்டு முறிச்சிக்குவோம்.. ஓகேயா.. சம்மதமா...”

“கேட்டுவிட்டு அமைதியானார். யாரும் பதில் சொல்லவில்லை. அமைதி நீண்டது. மீண்டும் சபாநாயகமே தொடர்ந்தார்.

“என்ன.. யாருக்கும் இதிலே சம்மதமில்லையா..! இந்த மௌனத்தை நான் சம்மதமில்லேன்னு அர்த்தப்படுத்திக்கறதா...? இல்லே.. சம்மதம்னு எடுத்துக்கறதா....?”

உரக்கக் கத்தினார்.

மௌனம் தொடர்ந்தது, சற்று அவகாசம் கொடுத்துவிட்டு அவரே மீண்டும் பேசத் தொடங்கினார்.

“உங்களுக்கெல்லாம் முடிவெடுக்க முடியலே... முடிவெடுக்கவும் முயற்சி செய்ய மாட்டேங்கிறீங்க... இப்ப.... நான் ஒரு முடிவைச் சொல்றேன். இது இந்த நிறுவனத்தோட சேர்மன்ங்கிற முறையிலும் இல்லே... பெண்ணைப் பெத்தவன் பெண்ணுக்காகப் பரிந்து பேசறேங்கிற நிலையிலே இல்ல... உங்க எல்லாத்தையும் விட வயசில பெரியவன். அனுபவசாலி. அந்த முறையிலே பேசறேன்”

அவரையே எல்லோரும் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

“சட்டப்படி சேகரும் நிர்மலாவும் டைவர்ஸ் வாங்கிக்கிட்டாங்க. சட்டப்படியும் சரி, நியாயப்படியும் சரி,



நிர்மலா இன்னமும் சேகர் கட்டின தாலியோட இருக்கறது சரியில்லை. அதுக்காக நிர்மலா அதை அவிழ்த்துக் கொடுத்திடனும்னு நான் சொல்லமாட்டேன். நிர்மலா அதை அவிழ்க்காத தாலே.. அவளோட மனசிலே இன்னமும் இந்த உறவு இருக்குதுன்னு நாம கண்டிப்பா நம்பலாம். அது மட்டுமில்லாம சேகரோட பழகக் கூடாதுன்னு கிரிஜாவைக் கூப்பிட்டுக் கண்டிச்சிருக்கா.. விவாகரத்து ஆனபிறகு அவன் எக்கேடு கெட்டாலென்னன்னு அவளால இருக்க முடியல... சேகரும் இந்த ஒரு வருடமா.. எந்தத் தப்புத் தண்டாவுக்கும் போகல.. அவரோட மனசிலேயும் யாருக்கும் இடம் கொடுக்கலே. இன்னமும் அவரோட அறையிலும் சரி, நிர்மலாவோட அறையிலும் சரி அவுங்க கல்யாணமானதும் சேர்ந்து எடுத்த போட்டோ தான் இருக்கு. எடுத்துப்போட அவங்களுக்கு மனசில்ல. இப்பக்கூட கொஞ்சநேரத்துக்கு முன்னாடி... 'நேரமாயிடுச்சு. இப்ப நீங்க டிராவல் பண்ண வேண்டாம். இங்கே தங்கிட்டுப் போங்க'ன்னு நிர்மலா சேகர்கிட்டே சொன்னதா எங்க வீட்டம்மா கௌரி சொன்னா. இருந்திட்டுப் போறது எதுக்கு.. இருந்தே வாழட்டுமே..."

யாரோ முதலில் கைதட்ட... எல்லோரும் கைதட்டியதும் சபாநாயகம் உற்சாகமடைந்தார்.

"சில விஷயங்கள் வாழ்க்கையில் ஒரு முறைதான் வரும். பிறப்பு, இறப்பு... மாதிரி கல்யாணம் கூட நம்ம பண்பாட்டுப் படி.. ஒரு தடவைதான் வரும், வரணும். அடிக்கடி மாத்திட்டிருக்க இது வீடு இல்ல.. வீட்டுக்காரனோ அல்லது வீட்டுக்காரியோ இல்ல. எது நமக்குக் கிடைக்கிறதோ அதோட சந்தோஷமா வாழணும். சரியில்லேன்னு மாத்திக்கிட்ட பிறகு வந்ததும் சரியில்லேன்னா என்ன பண்றது...! ஸோ... யாரும் மறுக்காம... முகம் சுளிக்காம நாளைக்குக் காலையிலே என்கூட எல்லாரும் காளிகாம்பாள் கோவிலுக்கு வரணும். நாளைக்கு நல்ல நாள். நிறைஞ்ச புதன். பொன்கிடைத்தாலும் புதன் கிடைக்காதும்பாங்க. அம்பாளுக்கு அபிஷேகம் பண்ணி வேண்டிக்கிட்டு சேகரையும் நிர்மலாவையும் சேர்த்து வைக்கிறோம்.. இன்னிக்கு அவர் ஆஸ்பத்திரியிலே இருக்கற தன்னோட அறைக்குப் போகட்டும்.

கோவிலுக்குப் போய் சாமி கும்பிட்டுட்டு மாலையை மாத்திக்கிட்டு நாளையிலிருந்து இங்கே அவுங்க கட்டியிருக்கற வீட்டுக்கே வரட்டும். ரெண்டுபேரும் நாளையிலிருந்து ஒண்ணா இருக்கட்டும். அதுக்குப் பிறகு சட்டப்படி குடும்பக்கோர்ட்டுக்கு எழுதி சரி பண்ணிக்கலாம். தொடர்ந்து ரெண்டுபேரும் குடும்பத்தையும் இந்த பிரமாண்டமான நிறுவனத்தையும் சந்தோஷமா நடத்தட்டும்...”

மீண்டும் வந்திருந்தவர்கள் கைதட்ட....

“கைதட்டல் மட்டும் போதாது.. என்னோட இந்த முடிவுக்கு சம்மதிக்கிறவங்க கை தூக்குங்க பார்ப்போம்”

என்றதும் எல்லோரும் கை தூக்குகிறார்கள்.. சேகரும் கை தூக்குகிறான்.. கடைசியாக தயக்கத்தோடும், வெட்கத்தோடும் நிர்மலாவும் கை தூக்குகிறாள்.

“நீதானம்மா.. முதல்ல கை தூக்கியிருந்திருக்கணும். கடைசியிலே தூக்குறியே..” என்ற சபாநாயத்தின் கையைப் பிடித்து,

“சம்மந்தி... இதிலே கடைசி என்ன, முதல்ல என்ன.... எல்லாரும் கை தூக்கியாச்சா– 100% சம்மதம்...” என்று ராமலிங்கம் மீண்டும் எல்லோருடைய சார்பாகவும் உறுதியளித்தார். உற்சாகமாக கைதட்டி மகிழ்ந்த எல்லோரும் திடீரென்று வெடிச்சிரிப்பொன்றை வெடித்தார்கள். காரணம் புரியாமல் திகைத்த சபாநாயகத்திடம் நிர்மலா காட்டிய திசையில்....

எல்லோரும் கை தூக்கிக்கொண்டு நிற்பதைப் பார்த்து தெரிந்தோ தெரியாமலோ அவர்களின் செல்லமான பெமரேனியன் நாய்க்குட்டி ராணியும் தன்னுடைய முன்னங்கால்களைத் தூக்கிக் கொண்டு நிற்கிறது. அதைப் பார்த்து சபாநாயகமும் சிரிக்க...

நிர்மலா–சேகர் இருவரின் நான்கு விழிகளில் மட்டும் கூடுதலாகக் கொஞ்சம் கண்ணீர் பனித்திருந்தது.

**(முற்றும்)**


# கொட்டு வச்ச வாத்தியார்

## வெட்டுவானம் சிவகுமார்

**வை**த்தி. அவரைப் பார்தாலே போதும், மாணவர்கள் அச்சத்தால் உறைந்து போவார்கள். கண்டிப்பானவர். நேர்மையானவர். பள்ளிகொண்டா அரசு மேனிலைப் பள்ளியில் கணக்கு ஆசிரியர். இவரிடம் படித்த மாணவன் கணக்கு பாடத்தில் தேர்ச்சி பெறாவிடில் அவன் எதற்கும் உதவாத மக்கு.

பள்ளிப் பருவத்தில் இவரிடம் படித்தவன் சந்திரன். நகரில் நிறுவனம் ஒன்றில் ஆபிசர். கோடையில் நடைபெறும் ஊர் திருவிழாவிற்கு தவறாமல் வருவான். அந்த ஆண்டும் குடும்பத்துடன் வருகைதந்தான்.

சந்திரன் வருகை கேள்விப்பட்டு முத்து அவனைப் பார்க்க வந்தான். முத்துவுக்கு சுட்டுப் போட்டாலும் கணக்கு வரவில்லை. முத்துவை எப்பாடு பட்டாவது தேர்ச்சிபெற வைப்பது என முயன்று பார்த்தார் வைத்தி. ஒருநாள் கொட்டு கொட்டென முத்து தலையில் கொட்டினார். முத்து என்ன செய்தான் தெரியுமா? பதிலுக்கு வைத்தியை தாக்கிவிட்டு ஓடிவிட்டான். அன்றோடு பள்ளிக்கு முழுக்கு. விவசாய கூலியாகி விட்டான். சந்திரன் நிலத்தை தன் பொறுப்பில் எடுத்து அதில் பணியாற்றி வந்தான்.



சந்திரன் தொழில் முறையில் முத்துவின் முதலாளி – இருந்தாலும் பள்ளித் தோழன் என்ற முறையில் வாடா போடா நண்பர்கள். ஆண்டுக்கு ஒரு முறை வரும் நண்பனிடம் முறையாக கணக்கை ஒப்படைத்து சந்திரனுக்கு சேரவேண்டிய பங்கை பணமாக கொடுப்பான் முத்து. சந்திரனும் கணக்குப் பார்க்காமல் முத்து தருவதை அப்படியே ஏற்றுக் கொள்வான்.

சிறுகதை



முத்து நம்ம சார் எப்படி இருக்காரு... சந்திரன்.

யாரு வைத்திசாரா - அவருக்கென்ன குறைச்சல் - அவரு பையன் சந்தோஷ் இப்ப வெளிநாட்டிலே வேலையில் இருக்கான். கைநிறைய சம்பளம். மாதா மாதம் சாருக்கும் பணம் அனுப்புகிறான்.

இது முத்து.

அப்படியா - சரி நான் போய் சாரை பார்த்துட்டு வரேன். எனக்கூறி புறப்பட்டான் சந்திரன்.

வைத்தி சார் வீட்டை சென்றடைந்தான் சந்திரன். வைத்தி மனைவி அம்புஜம் சிரித்த முகத்துடன் சந்திரனை வரவேற்றாள்.

அம்மா. சார் எங்கே. பார்த்து ரொம்பநாளாச்சு. பார்த்துட்டு போக வந்தேன்.

கலைக்டர் ஆபிசுக்கோ, எஜிகேஷன் ஆபிசுக்கோ போய் இருக்கார். அவருக்கு வரவேண்டிய ஒய்வூதியம் பணம் வந்து சேரல, அதுக்கு நடையா நடக்கறாரு...

சரிம்மா, நாளைக்கு வரேன். சார் வந்தா சொல்லுங்கோ எனக்கூறி தன் இருப்பிடம் திரும்பினான்.

**வே**லூர் மெயின் ரோட் - கொளுத்தும் வெயில். மகன் அனுப்பி வைத்த வெளிநாட்டு கலர் குடையின் தயவில் வெயில் கொடுமையிலிருந்து தன்னை காத்துக்கொண்டு எஜிகேஷன் அலுவலகம் நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தார் வைத்தி. அப்போது அவரிடம் பணியாற்றிய ஆசிரியர் பிச்சாண்டி எதிர்பட்டார்.

என்னா வைத்தி சார், எப்படி இருக்கீங்க.

நல்லா இருக்கேன். என் பென்ஷன் மற்றும் பிடிப்பு பணம் இன்னும் வந்தபாடில்லை. செக்ஷன் கிளார்க் சோமு என்னிடம் படிச்சவன்தான். ஆனா என்னமோ தெரியல பென்ஷன் ஆர்டரை இன்னும் அனுப்பி வைக்கல, அதான் போய்கிட்டு இருக்கேன்.

அப்படியா- சரி போய் பாருங்க- என்ன இதுபுது கலர் குடை. உங்க அடையாள குடை எங்கே?

அட இதுவா, என் பையன் வெளிநாட்டிலே வேலையா இருக்கான். அவன்தான் எனக்கு அனுப்பி வச்சான். நம்மூர் மதிப்புக்கு இது ரூ.2000. ஆனா நம்மூர் குடையோட ஒப்பிடும் போது இது ஒன்னும் சிறப்பு இல்லை.

நம்ம குடை காற்றடிச்சாலும், புயல் மழை அடித்தாலும் தாக்கு பிடிக்கும். ஆனா இந்த குடை காற்றடித்தா மடங்கிவிடுகிறது. ரோட்டுல போறவரவனுங்க

பார்த்து சிரிக்கிறானுங்க. அதோட நம்மகுடை ரூ.100க்கு கிடைக்கிறது. சமயத்துல ஊன்று கோலாவும் பயன்படுது.

சரி, சரி போய் அந்த கிளார்க்கை பார்த்து எப்போன்னு கேட்டுவரேன்.

வைத்தி சார் ஒண்ணு சொன்னா கோபப்படமாட்டிங்களே?

என்ன? என்ன? பரப்பரப்பாக கேட்டார் வைத்தி.

விவரம் தெரியாத ஆளா இருக்கீங்களே...

நீ என்ன சொல்றே!

தள்ளவேண்டியதை தள்ளினா தானா வருது...!

லஞ்சம் தரணுன்னு சொல்றீயா? இதோ பார் பிச்சாண்டி, உனக்கு தெரியாதது இல்லை, நான் சர்வீசுல இருந்தப்ப ஒரு தொகை லஞ்சமா கொடுத்தா தலைமை ஆசிரியர் பதவியே வரும்னு சொன்னாங்களே. ஆனா நான் என்ன சொன்னேன் உனக்கே தெரியும். லஞ்சம் கொடுத்தாதான் அந்த பதவி என்றால் வேண்டாம் என்று சொன்னேன். இறுதிவரை ஒரு ஆசிரியராகவே இருந்து ஓய்வு பெற்றவன்.

லஞ்சம் கொடுத்தாதான் எனக்கு ஓய்வு ஊதியம் வரும் என்றால் அது எனக்குத் தேவை இல்லை, சரி சரி நான் என் வழியிலேயே போறேன். இதுதான் இதுக்காக நான் எடுக்கிற கடைசி முயற்சி.

வைத்தி பேச்சில் இருந்த உறுதியை பார்த்து வாயடைந்து போனார் பிச்சாண்டி.

அலுவலகம் சென்ற வைத்து சம்மந்தப்பட்ட கிளார்க் தனது முன்னாள் மாணவன் சோமுவை பார்த்தார். வைத்தியை பார்த்ததும் சோமு சலித்துக் கொண்டே

நீங்க என்ன அடிக்கடி வந்து தொந்தரவு தர்றீங்க. அது வர வேண்டிய நேரத்துக்கு வந்து சேரும் போங்க.

அந்த பதிலை கேட்ட வைத்தி எதுவும் பேசாமல் விதியை நொந்துக்கொண்டே வந்த வழியே திரும்பினார்.

வைத்தி அந்த இடத்தை விட்டு அகன்றதும் அலுவலக சக ஊழியர் சங்கர்,

என்ன சோமு அவருகிட்ட படிச்சவ மாணவன்னு சொல்லற. பாவம் அவரை இப்படி அலைய விடறியே!

உனக்கு தெரியாது சங்கர் இந்த வைத்தி எவ்வளவு பெரிய அரக்கன் தெரியுமா? படிக்கிற போது என்னை எத்தனை முறை கொட்டி இருக்காரு தெரியுமா? அந்த வலி இன்னும் ஞாபகத்தை விட்டு போகல. வைத்தியை பார்க்கும் போதெல்லாம் அந்த

வலியால் துடிப்பது போலவே இருக்கு. அதா இப்படி இழுத்து அடிக்கிறேன்.

பயணக் களைப்பு – வெயிலின் கொடுமை – சென்ற வேலை இப்போதும் கூடிவரவில்லை. அசதியுடன் வீடு வந்தார் வைத்தி. சோபாவில் சோர்வுடன் சாய்ந்து கொண்டார்.

என்னங்க உங்க பழைய மாணவன் சந்திரன் வந்தான். உங்களைப் பார்க்க... சொல்லி முடிக்கவில்லை மனைவி அம்புஜம்.

சந்திரன் வந்தான்.

வணக்கம். உங்க கையை காட்டுங்க சார். முத்தம் வைக்கணும்.

ஏம்பா என்ன ஆச்சு உனக்கு!

உங்க கையால கொட்டுப்பட்டு கொட்டுப்பட்டு படிச்சதாலதான் இன்னிக்கு பெரிய பதவியில இருக்கேன். அதாலதான் நீங்க என்னை கொட்டிய கைக்கு முத்தமிட ஆசை. அது மட்டுமில்ல இன்னிக்கு காலையில பள்ளிகூடம் சென்று, என்னை முட்டிபோட வச்சிங்கிளே, அந்த இடத்தை கும்பிட்டு வந்தேன்.

குறுக்கிட்டு வைத்தி சொன்னார்,

ஆசிரியர்கள் மாணவர்களை கொட்டுவதும், அடிப்பதும் மாணவர்கள் நல்லா படிக்கணும், பரீச்சையில் பாசாகணும் அதற்குதான். ஆசிரியர்களுக்கென்ன மாணவர்களிடம் பகையா? அது எல்லாருக்கும் புரிவதில்லை.

அப்போது அம்புஜம் குறுக்கிட்டு,

சந்திரன், நீ வந்து கொட்டு பட்டதற்கு நன்றி சொல்ற. ஆனால் ஒருத்தன் இவருகிட்ட வாங்கிய கொட்டை சரியா புரிஞ்சிக்காம இவரை பழிவாங்குவதாக எண்ணிக் கொண்டு இவருடைய நிலுவை மற்றும் பென்ஷனை அனுப்பாமல் இழுத்தடிக்கிறான்...

என்ன சார் அப்படியா? அவன்பேரு என்ன? நான் போய் பார்த்து வருகிறேன் என்றான் சந்திரன்

அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நீ வந்து பார்த்தாயே அதுவே போதும் என்றார் வைத்தி.

**ச**ந்திரன் கல்வி அலுவலகம் சென்று சோமுவை சந்தித்தான். அவன் எதிர்பார்த்ததை விட கணிசமான தொகை கொடுத்தான். உடன் இருந்து வைத்தி சாரின் பென்ஷன் மற்றும் நிலுவை தொகையை தபாலில் அனுப்ப ஏற்பாடு செய்து விட்டு ஊர் திரும்பினான்.

மறுநாள் அதிகாலை சந்திரன் வீட்டிற்கு சோமு வந்தான். அவன் முகம் சோகத்தில் மூழ்கி இருந்தது.

சோமுவிடம் சந்திரன் கேட்டான் என்ன ஆயிற்று உனக்கு. என்னை பார்க்க எதற்கு வந்தாய் என்று முடிக்கும் முன்பே சோமு சொன்னான்.

சந்திரன் நான் சாருக்கு செய்த துரோகத்திற்கு கைமேல் பலன்கிடைத்து விட்டது. என்மகன் 10வது வகுப்பில் தோல்வி அடைந்து விட்டான். அவன் ஆசிரியரை சந்தித்து என் மகன் நன்றாக படிப்பதாகத்தானே எண்ணி இருந்தேன். ஏன் இப்படி என்றேன்.

ஆசிரியர் கூறுகிறார். உங்கள் மகன் மட்டும் அல்ல பல மாணவர்கள் தோல்வி அடைந்துள்ளனர். காரணம் என்னவென்றால் நாங்கள் எங்கள் கடமையை நன்றாகத்தான் செய்தோம். யாராவது, காது கொடுத்து கேட்டால்தானே.

மாணவன் சரியாக கவனம் செலுத்துவதில்லையே என நாங்கள் அவர்களை கண்டித்தால் உடனே புகார் கொடுத்து அவர்கள் சித்திரவதை செய்வதாக புகார் கொடுக்கிறார்கள். அதன் விளைவு எங்களுக்கு தண்டனை. அதனால் நாங்களும் ஒரு முடிவுக்கு வந்து விட்டோம். ஊதற சங்கை ஊதுகிறோம். யாராவது காதில் வாங்கிக் கொண்டால் சரி என்றபோக்கில் எங்களது பணிபோகிறது. அதுமட்டும் அல்ல. வரும் மாட்டை கட்டுவதுமில்லை, போறமாட்டை தேடுவதும் இல்லை.

இப்படி சொல்கிறார் அந்த ஆசிரியர். இந்த பதிலை கேட்டு அதிர்ந்து போனேன். அதுமட்டும் அல்ல. வைத்தி சாரின் அருமை அப்போதுதான் எனக்கு புரிந்தது அவரது கொட்டு எனக்கு அப்போது தவறாகப் புரிந்தது. இப்போது எனக்கு அதன் அருமை தெரிந்தது. வாங்க அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றான் சோமு.

திருந்திய சோமுவை பார்த்து மகிழ்ச்சி அடைந்த சந்திரன் மறுப்பேதும் கூறாமல் உடன் சென்றான்.

வைத்தி சாரின் வீட்டை அடைந்தவர்களுக்கு மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அன்று காலை அவருக்கு ஏற்பட்ட அட்டாக்கில் அவரது உயிர் பிரிந்து உயிரற்ற உடலாக வைத்தி. அவருக்கு வேண்டியவர்கள் சோகமாக அமர்ந்திருந்தனர்.

சார் போஸ்ட், தபால் காரர் குரல் கேட்டது. அவரிடமிருந்து வந்த தபால் சோமு அனுப்பியது. லஞ்சமே தராமல் வாழ்ந்த வைத்திக்கு லஞ்சத்தால் வந்தது, இந்த ஆர்டர். இதை நாம் ஏன் பெறவேண்டும் என அவர் ஆத்மா சொல்லியது போலும். இப்படி நினைத்து பார்த்தான் சோமு, நூறு கொட்டு அவன் தலையில் இறங்கியது போலத் துடித்தான்.

***

Kunguma Chimizh Fortnightly Registered with the
Registrar of Newspaper for India under No.R.N.42528/83. Price Rs.4.00

வாங்கிட்டீங்கதானே!

ஏப்ரல்
2013

# ஆன்மிகம்

பலன்

உங்கள் அபிமான தினகரன் குழுமத்திலிருந்து வெளியாகும் தெய்வீக மாத இதழ்

## வெற்றிகளை குவிக்குமா விஜய புத்தாண்டு?

## உங்கள் ராசிக்கு ஏற்படப்போகும் நற்பலன்கள் என்னென்ன?



துல்லியமான கணிப்பு
எளிமையான பரிகாரங்கள்

## தமிழ் புத்தாண்டு பக்தி ஸ்பெஷல்